● ஆனி - 2021

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

ஆனி - 2021

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : neythal34@gmail.com
mahendran54@hotmail.com

காசோலைகள் : R.Mahendran எனும் பெயருக்கு எழுதுங்கள்.

நன்றி : இணையம்


## வணக்கம்,

ஆனிமாத இதழுடன் (2021) சந்திக்கிறோம்.

படைப்பாளர்களின் ஒத்துழைப்புடனே தொடர்ந்து வெளியிடமுடிகிறது.படைப்பாளர்கள் தங்களின் படைப்புக்களை வேறெங்கும் பிரசுரமாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். படைப்புக்களைத் தனித்தனி தொகுதியாக்கவிரும்ப்பும் போது சங்கடங்கள் ஏற்படலாம். முடிந்தவரை 'லதா' எழுத்துருவில் அனுப்புங்கள்.

ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கான நீதி இன்னமும் தள்ளிப்போகும் நிலையே காணப்படுகிறது.ஒவ்வொரு வருடமும் மே 18 வந்து போகும் போது ஏற்படும் வலி சொல்லிமாளாது.மக்களின் அவலம் தொடரவேசெய்கிறது.

உலகில் கொறோனா அச்சுறுத்தலுடன்,யுத்த பீதியும் ஆங்காங்கே நிலவுகிறது.அமைதியை விரும்பும் மக்களின் சமாதானத்திற்கான சூழலையும் காலம் தந்துவிடமுடியாத தொலைவிலேயே தென்படுகிறது.

உலக மக்கள் அமைதியுடனும்,நோய்த்தொற்றின்றியும் சுபீட்சமாய் வாழ்கின்ற காலம் கனிந்துவரவேண்டும் என நாமும் பிரார்த்திப்போம்.

காற்றுவெளியின் தொடர் பயணம் உங்கள் கைகளிலேயே உள்ளது.பலப்படுத்தும் உரிமையும் உங்களிடமே தரப்பட்டுள்ளது.

பயணிப்போம்.

நட்புடன்,

**சோபா**



# காட்டு அய்யனாரும் ஒரு இரவும்

எனக்கு ராத்திரி வேளையில் சரண்டாவூரணிப் பாதையில் வருவதென்றாலே பயம்தான்... அந்தப் பாதையில் போக எப்போதும் நான் விரும்புவதில்லை... அப்படிப் போக வேண்டிய கட்டாயம் என்றால் வேர்த்து விறுவிறுத்துப் போய்த்தான் வீடு போய்ச் சேர்வேன்... எப்போது அந்த வழியாகப் போனாலும் முதல் முறை போவது போலத்தான் எனக்குத் தோன்றும்... காரணம் அந்தப் பாதையில் இருக்கும் காட்டு அய்யனார் கோவில்தான்... அவரின் ஆட்டத்துக்கு எத்தனையோ கதைகள் ஊருக்குள் வலம் வந்து கொண்டிருக்கின்றன... அத்தனையிலும் அவரே நாயகனும் வில்லனுமாய்.

எங்க ஊருக்குத் தேவகோட்டையில் இருந்து வரும் ரோடு நான் படிக்கும் போது ஆவரஞ் செடிகளுக்கு இடையே பயணிக்கும் ஒற்றையடிப் பாதையாகத்தான் இருந்தது. அதுதான் தனித்திருக்கும் அச்சிறிய கிராமத்தை நகரத்துடன் இணைக்கும் பாதையாக இருந்தது.

குழி எங்கிருக்கும்.... வளைவு எங்கிருக்கும் என்பதெல்லாம் என் அட்லஸ் சைக்கிளுக்குத் தெரியும் என்பதால் நான் எந்த இருட்டில் வந்தாலும் அது தன் போக்கில் லாவகமாய் வளைந்து வளைந்து செல்லும். அந்தப் பாதையில் சுடுகாடும் முனியய்யா கோவிலும் உண்டு என்றாலும் பயம் என்பது எப்போதும் இருந்ததேயில்லை. இப்போது அது தார் ரோடாக மாறியிருக்கிறது... வழியெங்கும் சாலை விளக்குகளும் இருக்கின்றன... மற்றபடி ஊருக்குள் எந்த மாற்றமும் இல்லை... விவசாயம் தொலைந்து போனதைத் தவிர.

எங்கள் ஊர் தனித் தீவு போலத்தான்... வேறு எந்த ஊரையும் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் சாலை வசதி இல்லை... பேருந்து வசதி என்பது இன்னும் பல வருசம் ஆனாலும் வரப்போவதற்கான அறிகுறி கூட இல்லை... தனித்த கிராமம் என்றாலும் முன்னோர்கள் ஒற்றையடிப் பாதையாய் கிழக்கு, மேற்கு, தெற்கு என மூன்று பக்கமும் இருக்கும் ஊர்களை இணைத்து வைத்துள்ளார்கள். அந்த ஒற்றையடிப் பாதையே இப்போது பைக் போகும் அளவுக்கு மாறியிருக்கிறது.

ஏதாவது வேலையாக இந்த மூணு திசைகளிலும் பயணிக்க வேண்டும் என்றால் தேவகோட்டைக்குப் போய்த்தான் சுற்றி வர வேண்டும் என்பதில்லை. ஒற்றையடிப் பாதையில் பயணித்தால் நேரம் மிச்சமாகும்... போக வேண்டிய இடத்துக்குச் சீக்கிரமும் போய்ச் சேரலாம்.

நான் இப்போது போக இருக்கும் பாதை எங்கள் ஊரில் இருந்து மேற்கே இருக்கும் கல்லூரணியை இணைத்த ஒற்றையடிப் பாதை. மேய்ச்சல் திடல் என்று அழைக்கப்படும் கொல்லைகள் வழியாகப் பயணிக்கும் பாதை அது. சிறிது தூரம் கண்மாய்க் கரையில் பயணிக்க வேண்டும். கல்லூரணியின் பின்பக்கமாய் ஊருக்குள் நுழைந்து தேரடி வீதி வழியாகப் பயணித்து கோவிலுக்கு அருகில் தேவகோட்டையில் இருந்து காரைக்குடி செல்லும் பாதையில் போய் இணைந்து கொள்ளலாம்.

செம்பூரணியில் இருக்கும் சின்னம்மா வீட்டிற்குப் போக, வர இந்தப்பாதைதான் பக்கம், தேவகோட்டை போகாமல் இந்த வழியில் போனால் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் சுற்றுவது மிச்சமாகும். உச்சியிலும் இரவிலும் இந்தப் பக்கம் பெரும்பாலும் யாரும் வராமல் இருக்க ஒரே ஒரு காரணம்தான்... அது காட்டு அய்யனார் காட்டுக்காட்டென காட்டிவிடுவார் என்ற கதைகளின் பயம்தான்.

“இங்கேரு... நீ இனி டவுனுக்குள்ள போயிச் சுத்தியெல்லாம் போ வேண்டாம்... கல்லூரணியில இருந்து குறுக்க போயிரு... அதான் பக்கம்...” அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் அம்மா.

திரும்பி அம்மாவை முறைத்தேன். “சாந்தரமே சொல்லியிருக்கலாமுல்ல... இம்புட்டு நேரம் சும்மா இருந்துட்டு இப்பத்தான் வீட்டுக்குப் போன்னு நிக்கிறே... அந்தப்புள்ள செம்பகக்காவைக் கூப்பிட்டுப் படுத்துக்காதா...” கடுப்படித்தேன்.

“என்னய என்ன பண்ணச் சொல்றே... உங்கப்பா ராத்திரிக்கு வந்துருவாருன்னு நினைச்சித்தான் சின்னவள விட்டுட்டு வந்தேன்... இப்பத்தான் அவருக்கு வேலயின்னு சொல்லி வரமுடியாதுன்னு போன் பண்ணியிருக்காரு... அவ போன்ல பயந்துக்கிட்டு பேசுறா... ஆடு, மாடெல்லாம் நிக்கிது... அவ மட்டும் தனியா இருந்து பழக்கமில்லயில்லடா... செம்பகம் வர்றாளோ என்னவோ... நீ இங்க இருந்து என்ன பண்ணப்போறே... நாங்கதானே நாளக்கி சாதகம் பாக்கப் போறோம்... நீயில்லயில்ல... சரவணப்பய அந்தப் பாதயிலதானே வேலக்கிப் போக வரவுமா இருக்கான்... இருட்டு ஏமம்ன்னு எல்லா நேரத்துலயும்தான் வர்றான்... உனக்குத்தான் பயம்... நல்லாத்தேன்... வயசுப்புள்ளக்கி என்ன பயம்..? டியூசன் முடிச்சிட்டு பத்து மணிக்கெல்லாம் தேவட்டயில இருந்து வர்றவந்தானே... என்னமோ பயந்து சாகுறே...”

“அது நல்ல ரோடு... ஆனா இது அப்புடியா...? பயந்துட்டு கெடந்தா பேய் ஓட்டுறேன்னு அம்புட்டுப் பேருமுல்ல அடிப்பானுங்க...”

“ரோட்டுல என்னடா நல்லது கெட்டது... அதுல கூட சுடுகாடு இருக்கு... இதுல என்ன இருக்கு... கோயில்தானே இருக்கு... பேய் கீயின்னு மனசுக்குத்தான்டா பயமெல்லாம்... அய்யனாரு இருக்க பாதயில பேயாம்... பிசாசாம்... சும்மா பொலம்பாமக் கெளம்பு...”

“காட்டுக் கோயில் அய்யனாரு அடிச்சி...” வேகமா ஆரம்பிச்சவனை, “இங்கேரு ஆயிரங் கதயிருக்கும்... அதெல்லாம் பெரிசா எடுத்துக்காத... சாமி எப்பவும் நமக்குத் தொணதானிருக்கும்... உனக்குப் பயமாயிருந்தா சுத்திப் போ... என்ன இப்ப....” எனக் கட்டையைப் போட்டாள் அம்மா.

“ம்... எம்புட்டுத் தூரம் சைக்கிள் ஓட்டுறது... இந்தப் பாதையிலயே போய்த் தொலை-யிறேன்...” என்றபடி எழுந்து கை கழுவி விட்டு சைக்கிளை எடுத்தேன்.

“பாத்துப்போடா...” அம்மா பின்னால் கத்தினாள்.

பதில் சொல்லாமல் சைக்கிள் பெடலில் காலை வைத்துக் கெந்தி ஏறினேன்.

“கடுப்புல போறாங்க்கா... ராசுப்பயல வேணுமின்னா தொணக்கிப் போச் சொல்லுவோமா...?” சித்தி சொன்னது காதில் விழுந்தது.

“அடேய்... ராசுவ வேணுமின்னா கூட்டிப் போடா...” பின்னால் கத்தினாள் அம்மா.

கேட்காதது போல் பெடலை மிதிக்கலானேன்.

தேரடி வீதியின் இறுதிவரை வெளிச்சம் இருந்தது... அதைத் தாண்டியபின் சற்றே பெரிதான ஒற்றையடிப் பாதை விளக்கு வெளிச்சமெதுவும் இல்லாமல் ஒரு கோடாய் தெரிந்தது.

சைக்கிளின் செயின் கவரில் ‘கரட்... கரட்...’ என உரசும் சத்தம் தவிர வேறு எந்தச் சத்தமும் இல்லை... மூன்றாம் பிறை என்பதால் அவ்வளவாக இருட்டு இல்லை. சைக்கிளை மிதிக்க மிதிக்க உடம்பு வேர்வையில் நனைய ஆரம்பித்தது.

கண்மாய்க்கரையில் ஏறினேன்... கரையின் முடிவில்தான் காட்டு அய்யனார் கோவில்... எங்கள் பகுதியில் அழகிய கல் கோவில் அதுவாகத்தான் இருந்திருக்க வேண்டும்... யாரோ

ஒரு செட்டியார்தான் கட்டியிருக்க வேண்டும்... யார் கட்டியது.. எந்த வருடம் கட்டியது என்ற குறிப்பெல்லாம் இல்லை... இப்போது சிதிலமடைந்து எடுத்துக் கட்டுவாரின்றித்தான் இருக்கிறது என்றாலும் கல்வேலைப்பாடுடன் கூடிய தூண்கள் எல்லாம் இன்னும் அழகாத்தான் இருக்கின்றன.

ஊருக்குள் இருக்கும் அம்மனுக்கும் காவல் தெய்வங்களான கருப்பர், முனியய்யா, வனகாளிக்கும் செய்யும் செவ்வாய், வெள்ளிப் பூஜைகளில் பாதி கூட அய்யனாருக்குச் செய்வதில்லை... அம்மன் திருவிழாவின் போது ஒரு நாள் சின்னதாய் ஒரு பூஜை... அதுதான் வருடத்துக்கும்.... அதுவும் கோவிலைச் சுற்றி வளர்ந்து நிற்கும் வேலிக்கருவைக்குள் போய் வர பெண்கள் யாரும் விரும்புவதில்லை... ஆண்கள் மட்டும்தான் அன்று போய் சாமி கும்பிட்டு வருவார்கள்.

நான் பார்த்தவரையில் அய்யனார் கோவில் என்றால் மிகப்பெரிய இரண்டு குதிரைகள் கோவில் வளாகத்துக்குள் நிற்கும்... அய்யனாரின் வாகனமாம் அது... அதில்தான் அவர் வேட்டைக்குச் செல்வாராம்... பெரும்பாலான கிராமத்து அய்யனார் கோவில்களில் உடைந்த குதிரைகள் நிற்பதையும் நகரை ஒட்டிய கோவில்களில் அரைப்பனை உயரத்துக்கு அழகான குதிரைகள் நிற்பதையும் பார்த்திருக்கிறேன்... இந்தக் காட்டு அய்யனார் கோவிலில் ஒரு காலத்தில் குதிரை நின்றிருக்குமோ என்னவோ தெரியாது... இப்போது குதிரை இருந்ததற்கான எந்த அடையாளமும் இல்லை... சின்ன ஊர் என்பதால் குதிரை இல்லாமல் நடந்தே சுற்றி வந்து விடுவார் போல என நினைத்துக் கொள்வேன்.

இரண்டு அம்மன்களுடன் அவர் இருக்கும் சிலை அவ்வளவு அழகாக, தத்ரூபமாக இருக்கும்... எண்ணெய் காணாத சிலை என்றாலும் அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்... மேலும் பிள்ளையார் மற்றும் சில அம்மன்களின் சிலைகளும் கோவிலின் வெளிப்புறத்தில் இருக்கும்... எல்லாமே அழகாக இருக்கும்... சிலவற்றின் கை, கால் உடைந்திருக்கும்... பெரும்பாலான அம்மன்கள் என்ன தெய்வம் எனத் தெரியாது... எதனால் அந்த அய்யனார் கோவில் எடுத்துக் கட்டாமலே கிடக்கிறது என ஊர் பெரியவர்களிடம் கேட்டால் பல கதைகளைச் சொல்வார்கள்... ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதமாய் இருக்கும்... மற்ற கோவில்களை எடுத்துக்கட்டிய ஊருக்குள் ஏனோ அய்யனார் கோவிலைப் புதுப்பிக்கும் எண்ணம் மட்டும் வரவேயில்லை...

சைக்கிள் ‘கரட்... கரட்...’ என்ற சத்தத்துடன் சீரான வேகத்தில் கண்மாய்க் கரையின் பாதியைக் கடந்திருந்தது. வேகமாக ஓட்டவும் பயமாக இருந்தது. நேரங்கெட்ட நேரத்தில்தான் இதன் செயின் கழறும்... அப்படிக் கழண்டு விட்டால்...? அந்தப் பயமே சைக்கிளை மெதுவாக மிதிக்க வைத்தது.

பத்தாவது படிக்கும் போதுதான் இருட்டில் தனியே வரப் பழகினேன்... அதுவரைக்கும் இருட்டும் முன் வீட்டில் இருப்பேன்... டியூசன் போனதால்தான் இருட்டில் வர வேண்டி இருந்தது... ஆரம்ப நாட்களில் இருந்த பயம் மெல்ல மெல்லக் குறைந்து எத்தனை மணி என்றாலும் பயமில்லாமல் வர ஆரம்பித்தேன். அப்போதெல்லாம் எதாவது பாடலை முணுமுணுத்தபடியே சைக்கிளை மிதிப்பேன்... சுடுகாட்டைக் கடக்கும் போது மட்டும் பாடல் கந்தர் சஷ்டியாக மாறியிருக்கும்.

இப்போது பாட்டுப் படிக்கும் எண்ணமெல்லாம் இல்லை... மனம் முழுவதும் காட்டு அய்யனார் பார்வையில் இருந்து தப்பிக்க வேண்டுமே என்ற நினைப்புத்தான் இருந்தது. பயம் நெஞ்சைக் கவ்வியது... கால் பெடலை வேகமாக மிதிக்க நினைத்தது... பயந்த மனசோ செயின் கழண்டால் என மிதிக்க விடாமல் தடுத்தது. அதுவரை இல்லாத காற்று எங்கிருந்தோ என் உடல் தழுவி நகர்ந்தது... சில்லிப்பாய் இருந்தது.

ஒருவேளை அய்யனார் வேட்டைக்கு கிளம்பியிருப்பாரோ...? நினைவே வேர்வையின் வேகத்தைக் கூட்டியது... ச்சீச்சீ... எட்டு மணிக்கேவா வேட்டைக்குப் போறாரு... ராத்திரி பன்னெண்டு மணிக்குத்தானே போவாரு... அதுவும் சூறாவளிக் காத்தாவுல்ல இருக்கும்.... இது மழைக்காத்து மாதிரி சுகமால்ல இருக்கு என நினைத்தவன் சூறாவளி என்றதும் பள்ளி நாட்களில் மாடு மேய்க்கும் போது உச்சி வேளையில் முனியய்யா கோவிலில் இருந்து கிளம்பி வயல்களுக்குள் சுழன்றாடி சுடுகாட்டைத் தாண்டி நகர்ந்து செல்லும் காற்றைப் பார்த்து முனியய்யா வேட்டைக்கு கிளம்ப்பிட்டாரு என்று சொல்லிக் கொள்வது ஞாபகத்தில் வந்தது. அது சுழன்றடிக்கும் அழகே தனிதான்... இப்பல்லாம் சூறாவளி குறைஞ்சிருச்சோ இல்ல நாமதான் பாக்குறது இல்லையோ... முனியய்யா வேட்டைக்குப் போய் வெகுகாலமாகிவிட்டது போலத்தான் எனக்குத் தோன்றியது.

கண்மாய்க்கரையில் இருந்து சறுக்கலாய் பாதி கீழிறங்க, சைக்கிளை மெல்ல இறக்கினேன். வடக்குப் பக்கம் சற்று தூரத்தில் காட்டு அய்யனார் கோவில் நிழலாய் தெரிந்தது... அதுவரை இருந்த அமைதியைக் குலைக்கும் விதமாக என் பின் பக்கத்தில் ஆந்தை அலறியது... திடுக்கெனத் தூக்கிப் போட பயந்து திரும்பினேன்... மெல்லிருட்டு மட்டுமே என்னோடு பயணித்தது... வானம் பார்த்தேன்... நட்சத்திரங்களின் இடையே பிறை நிலவு கண்சிமிட்டியது.

இப்போது காற்றின் வேகம் இன்னும் அதிகமாகியிருப்பது போல் தெரிந்தது. பொட்டல்வெளி என்பதால் காற்று 'ஊ' என ஓலம் இடுவது போல் இருந்தது. கோவில் பக்கமிருந்து சுழல் காற்று ஒன்று சுழன்று வேகமாய் என்னை நோக்கி வருவதைப் போன்றொரு பிரமை எனக்குள்...

இந்த நேரத்தில் சுழல் காற்றா... ச்சை... இருக்காது... நமக்கு என்ன பயம்... நம்ம ஊருக்குள்... நம்ம கோவில்... நம்ம சாமி.... என 'நம்ம'வை எனக்குள் நறுக்கென அழுத்திக் கொண்டேன். காற்று இதமாகவே வீசிக் கொண்டிருந்தது.

அய்யனார் கோவிலுக்குப் பின்னே இருக்கும் ஆலமரத்தில்தான் செல்வராஜ் தூக்கில் தொங்கினான் என்ற நினைப்பு எனக்குள்ளே எழ, என் பின்னே செல்வராஜ் காலைச் சரட்டிச் சரட்டி நடந்து வருவது போலவும், சுந்தரு எனக் கூப்பிடுவது போலவும் தோன்ற, பயத்தில் சைக்கிளை சற்றே வேகமாக மிதித்தேன்.

'கடக்' என்றொரு சப்தம்...

'அய்யோ... எது நடக்கக் கூடாதுன்னு நெனச்சேனோ அது நடந்துருச்சு... செயின் கழண்டுருச்சு போல...' என்று நினைத்தபடி சைக்கிளை விட்டு இறங்காமல் காலை ஊன்றி நின்று பெடலை பின்னால் சுற்றிப் பார்த்தேன். வேகமாய் சுற்றியது. அடச்சீ... கவுத்திருச்சே என்ற நினைப்பின் ஊடே பயம் என்னைப் பலமாகக் கவ்விப் பிடித்துக் கொண்டது. அங்கிட்டுப்

பார்க்காதே என மனது நினைத்தாலும் கண்கள் கோவில் பக்கமாய் பார்க்க, கோவிலை ஒட்டி வெள்ளையாய் ஒரு உருவம்... வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கோடாய் தெரிந்தது.

'ஆத்தாடி... அய்யனாரு...' வாய் விட்டுக் கத்தியவனுக்குச் சத்தம் வெளிவரவில்லை. சாமி இப்படித்தான் வெள்ளை உருவமாய் வானத்துக்கும் பூமிக்குமாய் நிற்கும் என ஊரில் உலவும் பல கதைகளில் சொல்லக் கேட்டிருக்கிறேன். பயத்தில் வேர்த்துக் கொட்ட, வறட்சியில் நாக்கு மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டது.

சைக்கிளை விட்டு இறங்குவோமா வேண்டாமா என்ற யோசனையுடன் அந்த வெள்ளை உருவம் இன்னும் நிற்குதா எனப் பார்த்தேன்... நின்றது... இப்போது என் கண்ணுக்கு வானத்துக்கும் பூமிக்குமாய் தெரியவில்லை... மெல்ல நகர்வது போல் இருந்தது... ஏதோ மாடொன்று என்பது தெளிவாக இல்லை என்றாலும் கண்டு பிடிக்கும்படியாகத் தெரிய ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். படபடவென அடித்துக் கொண்ட இதயம் மெல்ல ஆசுவாசமானது.

ஒற்றைக் காலைப் பெடலில் வைத்துக் கொண்டு மற்றொரு காலை தரையில் நன்றாக ஊனி ஒரு எக்கு எக்கினேன்... சைக்கிள் கொஞ்சம் நகர்ந்தது... மீண்டும்... மீண்டும்... எக்கினேன்... நக...ர்....ந்....த....து.

இப்படி எவ்வளவு தூரம் ந...க...ர்...த்...து...வ...து..?

இதற்கு இறங்கி உருட்டிக்கிட்டு ஓடலாம்... பயத்தோட வேகமாப் போயிடலாம்... யோசித்தேன்.

இந்த அம்மாவை இனி எங்கயும் கூட்டிப் போகக்கூடாது... இப்ப மாட்டிக்கிட்டு முழிக்கிறது நாந்தானே... இந்நேரம் தங்கச்சிக்கிட்ட ஊர்க்கதை பேசிக்கிட்டு ஏதாவது ஒரு மெகாசீரியலைப் பாத்துக்கிட்டுப் படுத்துக் கிடக்கும்... நானுல்ல இப்ப நடுத்தெருவுல நகரமுடியாம நிக்கிறேன்... அம்மா மீது கோபம் கோபமாக வந்தது... ராசுப்பயலக் கூட்டிக்கிட்டு வந்திருந்தாலும் பேசிக்கிட்டே சைக்கிளைத் தள்ளியிருக்கலாம்... இல்லாட்டி நின்னு செயினையாச்சும் மாட்டியிருக்கலாம். வீம்புல வேகமா வந்தாச்சு... இப்ப மாட்டிக்கிட்டாச்சு.

இந்தச் சைக்கிள் பகல்ல எல்லாம் எவ்வளவு வேகமாப் போனாலும் செயின் கழடாது... ராத்திரின்னா மட்டும் அதுக்குத் தெரியும்... நாலு நாளைக்கு முன்னாலதான் சத்தியண்ணனுக்கிட்ட செயின்ல ரெண்டு பல்லைக் கட் பண்ணி இழுத்து வச்சி சரி பண்ணிக்கிட்டு வந்தேன்... அப்பவே சொன்னாரு... இந்த முழுக் கவரு வேணான்டா... கரட்டுக் கரட்டுன்னு உரசுது பாரு... ஆப் கவரு போட்டுக்க... செயின் கழண்டாலும் மாட்டுறது ஈசின்னாரு... ஆப் கவருன்னா பேண்டுல செயின்ல இருக்க ஆயில் கழும்பு ஒட்டும்ன்னு நாந்தான் வேணான்னு சொன்னேன்... இப்ப அனுபவிக்கிறேன்...

வெட்டிப் போட்டும் இப்பக் கழண்டிருக்குன்னா... முதல்ல இந்தச் செயினை மாத்தணும்... இந்த நேரத்துல செயின் கழடுறதெல்லாம் அய்யனாரோட வேலைதான்... ஊரெல்லாம் சுத்தி அய்யனாருக்கிட்ட வந்து நின்னது நெனப்பு...

கண்மணிப்புள்ள வீட்டுக்கு வரக்கூடாதப்போ இங்கு மாடு பத்தப் பொயிட்டுத்தான்

ரொம்பக் கெடந்துச்சு... என்னென்னமோ பண்ணித்தான் காப்பாத்துனாக... ஏன் சாமி இல்லைன்னு சொல்ற சின்னக் கண்ணு அய்யனாரு என்ன புடுங்கப் போறாருன்னு சொல்லி, மத்தியான நேரத்துல வீராப்பா கோவிலைச் சுத்தி நிக்கிற கருவையில கருவக்காய் பொறக்க வந்துட்டு வயித்தாலயும் வாயாலயும் போயிக் கெடந்தாருல்ல... ச்சை இதெல்லாம் இப்ப எதுக்கு நினைக்கத் தோணுது.

காலை ஊனித் தள்ளுனதுல கால் வலிக்க ஆரம்பிச்சது... கண்மாய்க் கரையை விட்டு கொஞ் சத் தூரம்தான் வந்திருந்தேன்... இன்னும் கொஞ்சத்தூரம் போகணும்... இறங்கி உருட்டிக்கிட்டுப் போகவும் பயம்... வண்டியை நிப்பாட்டி செயினை மாட்டவும் பயம்...

மேய்ச்சல் திடலின் தெற்குப் பக்கத்தில் சரட்... சரட்டென யாரோ நடந்து வருவது போல் கேட்டது... செல்வராஜோட ஆவியா இருக்குமோ.... இனி வேர்க்க உடம்பில் தண்ணியில்லை என்ற நிலையிலும் குப்பென்ற வெப்பம் உடலெங்கும் பரவியது.

பயம்... பயம்... பயம்...

நெஞ்சு திக்குத் திக்குன்னு வேகமா அடிக்க ஆரம்பிச்சது... இது வேலைக்கு ஆகாது என்ன ஆனாலும் பரவாயில்லை... இறங்கி உருட்டிக்கிட்டு ஓடிடலாம் இன்னும் கொஞ்சத் தூரம்தானே என முடிவுக்கு வந்து இறங்கிய போது சரட்... சரட்... என்னை நோக்கித்தான் வருகிறது என்பதை உணர்ந்தேன்.

பயத்தில் உறைந்து நின்னேன்...

மனசுக்குள் காட்டு அய்யனாரை விடுத்து முனியய்யாவைத் துணைக்கு அழைத்தேன்...

“யார்யா அது...?” இருட்டுக்குள் இருந்து இதுவரை கேட்டிராத ஒரு கரகரப்பான குரல்.

பதில் சொல்லவில்லை.

“சைக்கிள்ல எதுவும் பிரச்சினையா...?” என்றபடி அருகில் வந்தார் அவர்.

“ம்... செயின் கழண்டுருச்சு...”

“மாட்ட வேண்டியதுதானே... வயசுப்புள்ள பயந்துக்கிட்டு நிக்கிறியளாக்கும்“ என்றவர் கையிலிருந்த டார்ச்சை சைக்கிளின் பின்புறம் அடித்தார். இருட்டில் தெரியாத அவரின் கரிய உருவம் வெளிச்சத்தில் லேசாகத் தெரிந்தது. தோளில் ஒருதுண்டு... துண்டு என்பதை விட போர்வை என்றுதான் சொல்ல வேண்டும்... ஒரு கையில் கம்பு... மறு கையில் டார்ச் லைட்...

சைக்கிள் செயினை மாட்டினேன்.

“நீங்க யாரு... இந்த நேரத்துல... இங்கே...” மெல்லக் கேட்டேன்.

“என்ன தம்பி... நடுநிசியில இங்க நின்னா பயப்புடலாம்... இப்ப மணி என்ன ஒம்பதுக்குள்ள இருக்குமா... இப்ப என்ன பயம்... நாங்க பக்கத்துலதான் ஆட்டுக்கெட போட்டிருக்கோம்... கல்லூரணிக்குப் போயி பீடி, போயலப் பொட்டலமெல்லாம் வாங்கிட்டு வரும்போது வெளிய போகலாம்ன்னுட்டு இறங்கிப் பொயிட்டு வர்றேன்...”

“ஆமா... சாத்தரங்கம்மாப் பக்கம் சங்கரய்யாவோட தோட்டத்துல கெட போட்டிருக்கு... ரெண்டு நாள் முன்னால அங்கிட்டுப் போகும்போது பாத்தேன்... அது நீங்கதானா...”

“ஆமாமா...” என வெளிச்சத்தை என்மேல் பாய்ச்சியவர் டார்ச்சை அமத்திவிட்டு “என்ன தம்பி... பயந்து போயி வர்றிய போல... நல்லாத்தேன்... நானெல்லாம் எதுக்கும் பயப்படுறதில்ல... என்ன பயம் வேண்டிக்கெடக்கு... சாமி, காத்துக்கருப்பு எல்லாமே நாம வச்சதுதானே தம்பி... பட்டியக்கல்லுல பொட்டு வச்சி ரோட்டுக்கர முனியன்னு சொல்லுவோம்... இந்தப் பக்கம் பொம்பளங்க போக்கூடாதுன்னா பனமரத்துல ஒரு ஆணியடிச்சி, வில்லுக்கம்பு வெள்ளச்சாமின்னு கும்பிட ஆரம்பிச்சிருவோம்... அப்புறம் அவரு வேட்டக்கிப் போறாரு... வெளாடப் போறாருன்னு கதகள உருவாக்கித் தலமொற தலமொறயாச் சொல்ல வச்சிருவோம்... எந்தச் சாமியும் யாரயும் துன்புறுத்தனும்ன்னு நெனக்கிறதில்ல... அதெல்லாம் நம்ம முன்னோர்கள்தானே... அதுகள நெனச்சி நாமளாத்தான் உள்ளுக்குள்ள பயத்தச் சொமந்து அதுனாலயே கஷ்டப்பட்டுக்கிறோம்... ஊரச்சுத்தி காளி, கருப்பன், முனியய்யா, நாகரு, பிடாரன், பேச்சி, நாச்சியம்மத்தான்னு எதுக்குச் சாமியள வச்சிருக்காங்கன்னா ஊரக்காக்கத்தானே ஒழிய உள்ள இருக்கவனப் பயமுறுத்த இல்ல...” விபரமாய் பேசியபடியே நடந்தார்.

நான் உம் கொட்டியபடி சைக்கிளை உருட்டிக் கொண்டிருந்தேன்.

“எங்க ஊர்ல ஒரு கருப்பர் கோவிலு... பெரிய கோவிலெல்லாம் இல்ல... சின்ன ஓட்டுக்கொட்டகதான்... ஊரெல்லாம் காலரா வந்தப்போ பக்கத்து ஊர்ல இருந்த காலரா எங்கூரு கருப்பரத்தாண்டி ஊருக்குள்ள வரலன்னு சொல்வாங்க... அது உண்மயா பொய்யான்னு எல்லாம் எனக்குத் தெரியாது... நானும் அதே கதய என்னோட பிள்ளயளுக்கும் பேரப்புள்ளயளுக்கும் சொல்லித்தான் இருக்கேன்... கருப்பரக் கும்பிடும்போது மனசுக்குள்ள ஏதோ ஒரு திருப்தி... அம்புட்டுத்தான்...”

“ம்...”

“அய்யனாரு அடிச்சிட்டாரு... முனியய்யா அடிச்சிட்டாருன்னு கத சொல்றதெல்லாம் பயமுறுத்தத்தானே ஒழிய, உண்மயில்ல... ஏதோ எப்பவோ எப்படியோ நடக்கும்... அது அங்க போனதாலதான் நடந்துச்சுன்னு முடிவுக்கு வருவோம்... கார்ல அடிபட்டுச் செத்தவன வீட்டுல இருந்திருந்த அடிபட்டிருக்க மாட்டான்னு சொல்லுவோம்... விதி எங்க இருந்தாலும் கொண்டு போகாதா என்ன... மனுசளப் பயமுறுத்துற சாமிய எதுக்கு ஊருக்குள்ளயும் ஊரச் சுத்தியும் வச்சிக் கும்பிடணும்... சொல்லுங்க” பேச்சை நிறுத்தி, டார்சை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

“அப்பா கருப்பானோ... ஆத்தா மாரின்னோ... என்னப்பெத்த முனியய்யானோ கும்பிடும்போது நமக்கு ஏதோ ஒன்னு கெடக்கிதுல்ல... கஷ்டத்தோட முன்னாடிப் போயி நின்னா மனசுக்குள்ள நிம்மதி எட்டிப் பாக்குதா இல்லயா.... அதுதான்... அம்புட்டுத்தான்... என்னமோ ஒரு சக்தி இருக்கத்தான் செய்யுது... அவன் அள்ளிக் கொடுக்கவும் போறதில்ல... நம்மளத் தள்ளி விட்டும் வேடிக்க பாக்கப் போறதும் இல்ல... என்ன நான் சொல்றது... சரிதானே...”

“ம்“ என்றவன் “கையில வெளக்கு வச்சிக்கிட்டு அதை ஏன் அடிக்காம இருட்டுக்குள்ள வந்தீங்க...” சாமி கதைகளை மாற்ற நினைத்து சம்பந்தம் இல்லாமல் கேட்டேன்.

“நமக்கு இருட்டு ஏமம் எல்லாம் ஒண்ணுதான் தம்பி... வெளிய போயிட்டு கால் தடம் பாத்து நடந்து வர்ற அளவுக்கு நெலவு இருக்கு... அது போதாதா... பதினஞ்சி வயசுல இருந்து ஆடுகளோட காடுகரயின்னு சுத்துறவன் நானு... எனக்கு எதுக்கு தம்பி வெளிச்சம்... இந்த கம்பளியும் கையில இருக்க கம்பும் டார்ச்சும் எப்பவும் என்னோட இருக்கும்... அது இல்லாம எங்கயும் போறதில்ல... கர்ணனோட கவச குண்டலம் மாரிப் பழகிப் போச்சு... அம்புட்டுத்தான்...” சிரித்தார்.

பேசிக்கொண்டே என்னோடு எங்க ஊர் ஊரணி வரை வந்தார்.

“இனிப் போயிருவீங்கதானே...”

“ம்... எனக்காகவா இங்கிட்டு வந்தீங்க...”

“பின்னே... எங்க கெட அங்கிட்டுல்ல கெடக்கு... எம்பேரப்புள்ள மாரியிருக்கீக... பயந்து வேற நிக்கிறிய... அதான் வந்தேன்... நடக்குறது நமக்குப் புதுசில்ல தம்பி... தெனமும் ஆட்டோட நடந்துக்கிட்டுத்தானே இருக்கோம்... இந்தா ஊரணியில காலக் கழுவிட்டு இப்புடியே குறுக்கால வயலுக்குள்ள விழுந்து போயிருவேனுல்ல...” என்றபடி ஊரணிக்குள் இறங்கினார்.

நான் அவரிடம் சொல்லிக் கொண்டு சைக்கிளை மிதித்தேன்.

வாசலில் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டுக்குள் போனதும் “அம்மா இப்பத்தான் கேட்டுச்சு... அண்ணன் வந்துட்டானான்னு.... என்ன இப்படி வேர்த்துப் போயி வந்திருக்கே... பயந்துட்டியா... இந்தப் பாதையில வர நீ பயப்படுவேன்னு எனக்குத் தெரியும்... இப்பக் கூட அம்மாட்ட அதை எதுக்கு வரச்சொன்னேன்னுதான் திட்டுனேன்... அதான் செம்பகக்கா இருக்குல்ல... அது வந்து தொணக்கிப் படுத்துக்கும்ல்ல... காட்டுப் பாதையில... அம்மாவுக்கு அறிவேயில்லை...” துண்டை எடுத்து என்னிடம் நீட்டினாள் புவனா.

“சரி விடு... அதான் வந்துட்டேனுல்ல... நீ தனியா இருப்பேல்ல... சைக்கிள் செயின் கழண்டுருச்சு... அதான்...” என்றபடி முகம் துடைத்தவன் சட்டையைக் கழட்டி வீசினேன்.

“அய்யய்யோ... இருட்டுக்குள்ள மாட்டியிருக்க முடியாதே... உருட்டிக்கிட்டேவா வந்தே...”

“இல்ல... நல்லவேளை ஆட்டுக்கெட போட்டிருக்கிற அய்யா ஒருத்தர் அங்கிட்டு வந்தாரு... அவருதான் செயினை மாட்ட வச்சி எங்கூட பேசிக்கிட்டே நம்ம ஊரணி வரைக்கும் வந்தாரு...”

“ஆட்டுக்கெடயா... சங்கரய்யா தோட்டத்துல போட்டிருந்தாங்களே அவங்களா...”

“ஆமா அப்புடித்தான் சொன்னாரு...”

“அவங்கதான் நேத்தே கெடயக் காலி பண்ணிட்டுப் போயிட்டாங்களே....” என்றபடி என் முகத்தை பயத்தோடு பார்த்தாள் புவனா.

❑

● மு. ஜெரோஷா

# தமிழ் மொழி

சிங்கத்தின் பரம்பரையில்
பிறந்தவளே

தங்கத்தின் ஒளியைப்
பெற்றவளே

சங்கத்தில் பெருமையோடு
வளர்ந்தவளே

மொழிகளுக்கெல்லாம்
மூத்தவளே

செம்மொழியாய் சிகரம்
தொட்டவளே

தொல்காப்பியத்தால் மேன்மை
அடைந்தவளே

சிலப்பதிகாரத்தால் வீரம்
பெற்றவளே

மணிமேகலையால் புகழ்
பெற்றவளே

திருக்குறளால் வாழ்வு நெறியைக்
காட்டியவளே

தமிழ்நூற்கள் பிறவால்
தலை நிமிர்ந்து வாழ்பவளே

கவியும், உள்ளக் களிப்பும்
தந்தெமைக் காப்பவளே

தமிழ்த் தாயே! உன் நிழலில்
தனி இன்பம் காண்கின்றேன். ❑

● தாமரைச்செல்வி மனோகரன்

முடியணிந்த கிருமி
முழுப்பேரையு மழித்தாலும்
முடிவுலா யுத்தங்களால்
மூவுலகமு மழிந்தாலும்

தவறுகளை மன்னிக்கவும் மாட்டோம்
தானென்ற பெருமைதனை
இழக்கவும் மாட்டோம்

செய்த வினை தீர சென்றிடுவீர் திருத்தலங்கள்
செய்திடுவீர் குடமுழுக்கு,

அன்னதானம் அர்ச்சனைகள்
கற்பூரச்சட்டி காவடிகள்
இன்னுமின்னு மெத்தனையோ?

கோள் குண்டணி புறணி
கோர்த்திடுவீர் நாளும்
வாய் வீச்சால் வரிந்து கட்டி
வம்பு தும்புக் கிழுத்திடுவீர்

காணாத போதினிலே
கதைகள் பல பேசிடுவீர்!
கண்டதும் நேரினிலே
கனியமுதம் சிந்திடுவீர்!

உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசும் உலுத்தர்களே!
வாழ்நாள் குறுகியதென் றுணர்ந்திடுவீர்!

வீணே குதர்க்கம் விளையாமல்
வாழும் நாளில் வன்மமின்றி
நாளும் அன்பைப் பொழிந்திடுவீரே! ❑

● ஜே. வஹாப்தீன்

# ஒரு மாணவன் பூமரம்

வெட்டி எறிந்த வெறும் கம்பு என்று
வெயிலில் கிடந்தேன்
எடுத்துப் பார்த்துவிட்டு
நீங்கள்தானே இந்த மண்ணில்
நம்பிக்கையோடு நட்டீர்கள் என்னை.

எனக்குள் ஈரம் இருப்பதாய்
கண்டுபிடித்த விஞ்ஞானியே
உங்கள் கண்ணில் படாதுபோயிருந்தால்
வெயிலின் கொடுமையில் விறகாகிச்
சுருண்டிருப்பேன்
உள்ளிருந்த ஈரமும் வற்றி.

என்னை நட்டு
பாடத்தை நீர் பொழிந்தபோது
உக்கி இருந்த என் அறிவு அரும்பியதை
காற்றுத்தான் எனக்கு காட்டித் தந்தது.

நீங்கள் பாசத்தோடு மண்கலந்து
என்னை நட்ட ரகசியம்
எனக்குத் தெரியவில்லை.
என்னைக் குழியில் போட்டு
அடக்கம் செய்வதாய் பழிபூசி கலங்கி-
யிருந்தேன்.

ஆசானே
நீங்கள் ஊற்றிய அன்பு என் வேரில்
ஊறுவதை இன்று உணர்கிறேன்.

நீங்கள் சொல்லித் தந்த
வார்த்தைகளெல்லாம்
இன்று என்னில் பல நூறு பூக்கள்.
நீங்கள் அள்ளி வார்த்த அறிவு நீரால்
என் கிளைகளுக்குப் புத்தம்புதிய
கனுக்கள்.


என் இலைகளில் செழிப்பு
பட்டைகளூடே தேன் கசிவு
கொதித்து வருவோருக்கும் நிழல்
கொடுக்கும் தகைமை நீங்கள் தந்தது.
ஆசானே
விறகுக்கு வாழ்க்கை கொடுத்தது
உங்களின் கடமை.

நேரம் தவறாமல் என்னைப் பராபரித்த
ஆசானே
உங்களின் ஒரு மாணவன் பூமரம்.
இன்று
அக்கம் பக்கமெல்லாம் வாசம்
பரவுகிறதே.

என் கனுக்கள் முழுதும் கண்களாகி
உங்களைத் தேடுகிறேன்
என்னைச் சுற்றி எத்தனைபேர்
நீங்களோ தூரத்தில்
அல்லது
யாரும் காணாமல் ஓரத்தில்.

விறகாய் விலாசம் தொலைந்துபோகும்
ஒவ்வொரு மாணவர்க்கும்
வாய்க்க வேண்டும்
உங்களைப்போல் ஓர் ஆசான்
உலகமெல்லாம் பூமரம் மணக்கும். ❑

# மிர்தாதின் புத்தகம்- ஒரு பார்வை




இதயத்தால் படிக்க வேண்டிய புத்தகம் இது.. இப்படித்தான் ஓஷோ கூறுகிறார்.

இப்புத்தகத்தை படைத்த "மிகைல் நெய்மி"யை இந்த நூற்றாண்டின் மாபெரும் எழுத்தாளர் மட்டுமல்ல.. எல்லா நூற்றாண்டுகளிலும் இவரே மாபெரும் எழுத்தாளர் என்றும் கூறுகிறார்.

ஸ்தம்பிக்கத்தான் வேண்டி இருக்கிறது.. நான் நானாகும் மிகச் சிறந்த தருணத்தை இப்புத்தகம் மிக நுண்ணிய பொழுதுகளில் தருவது.. கிடைக்கப் பெற்ற எதுவும் கிடைத்த பின் எதுவாகும் என்றொரு மாபெரும் கேள்வியோடு நான் அற்ற எதிர் நிலைக்குள் யார் அற்ற என் நிலையைத் தேடத் துவங்குவதற்கு நீட்டித்துக் கொள்கிறது. தன் அற்புத பக்கங்களின் அடுத்தடுத்த வரிகளின் ஊடாக நம்மை வியக்க வைக்கும் மாய தத்துவங்களின் நிதர்சனத்தை கடந்து விடும் முன்.. நிதானம்.. இழக்காமல் இருப்பது அவசியம்.. அத்தனை மூர்க்கமாக உங்களைத் தாக்கும்.. உண்மையின் வலிமை.. மிகப் பெரிய சூட்சும அவிழ்த்தல்.. அது அப்படித்தான்.. தயாராகியே படியுங்கள்.. ஏக்கம் கொண்டவர்களே வெற்றி பெறுவார்கள் என்று பூதாகரமாகவே விரிகிறது மிர்தாதின் பக்கங்கள். பக்கங்களில் இருக்கும் சாரத்தின் விளிம்பை.."மிகைல் நெய்மி"யின் பாரபட்சமற்ற பெருங்காற்று வனாந்தரத்தின் வாக்கிய அமைப்போடு..'மிர்தாத்' என்னருகே இருக்கிறார். நோவாவின்..சொல் பிடித்த அதற்கும் முந்தைய பெரு மழையின் யோசனையென புன்னகைத்துக் கொண்டே இருக்கிறார்..அது நம் மர்மங்களின் முகமூடி திறக்கும் அற்புத ஞானத்தின் திறவு.. ஒளியின் சாராம்சம்.. நம்மை வந்தடைய செய்யும் மிகச் சிறந்த ஒப்பனை கலைதலின் வழி.

படிக்கும் ஒவ்வொரு முறையும் சிறு நடுக்கம் பெரு இயக்கமாய் மாறிடும் மாயத்தின் சக்கரத்தை நான் உணர்கிறேன்.... நீங்களும் உணரலாம்.. யார் கூறும் யாவும்.. அது கூறும் தீர்வும்..எண்ணற்ற முயக்கங்களின் விடுபடுதல் என்றே தோன்றுகிறது..இதயத்தின் ரத்த சகதிக்குள்.. ஒட்டியும் ஒட்டாமலும்..உறவைக் கடந்த நிலைக்குள் நிர்வாண ஊர்தல்.. வாடையின் பிசுபிசுப்புக்குள் சிவப்பின் சில்லிடல்களை மீண்டும் மீண்டும் உள் வாங்க முடியும். பனியும் வெயிலும் மழையும் காடும்.. தத்தளிக்கும் பலிபீடமாக உரு செய்தல் உணர் செய்தல். உணருதலின் சுகம் உயிர்ப்பித்தலின் வலை.. எல்லாமும்.. சொல்லும்.. கேள்விகளை கேள்விகளாகாவே விட்டு விட்டு.. விடுதலை பற்றிய பதிலாக மிர்தாத் தெளித்து தெளிந்து செல்வது அலாதி.. அது.. அதிகாலை கோலத்தின் மயிலிறகு ஞாபகமென சிறு பிள்ளை பார்வைக்கு ஒப்பானது. வேண்டுதலின் உட்கட்ட சிலிர்ப்புகளின் கூடார காட்சி. பொழிவது எதுவும்.. சுகமே.. அனுவச் சாரலின் நீட்சிக்குள்.. அடுத்த பக்கம் புரட்டும்..

இலை நுனியின் கனவுக் கருக்குள் சருகின் நிறத்தின் சூட்சுமம் மெல்ல வினவும் மாலை மயக்கத்தின்..மௌன தவிப்புகளை இணுங்கிய காற்றுக்கு யார் விளக்குவது..அடுத்தடுத்த திறவுகளின் கட்டுப்பாட்டு சாரளத்தின் கசிவுகளாக கீற்றாய் நுழையும் ஒளியின் தத்துவத்தில்.. தூரத்து சப்தம் பெரு வெடிப்பை நினைவூட்டும்.. அது காலத்தின் இறுமாப்பை மெல்ல அவிழ்க்கும் சதி செய்து பின் காலமே அது பொய்யடா.. என்று கத்தி கூச்சலிடும்.. மெய்ம் மறந்த சோலைக்குள் யார் நிற்கும் தருணத்தையும் எதாவதொரு பக்கம் தந்து விட்டு மடியும் நாளில்.. கண்களில்.. ஒளி பெற்று காதலை நெஞ்சம் சுரக்கும். காதலின் ஆதிக்கத்தின் பரப்பெங்கும்.. அன்பின் சுவடுகளே.

கருப்பொருளுக்குள் கண்டடைந்த எதுவும்..அதுவாக ஆகி விடுகிறது. அதுவென்பது இதுவாகவும் இருக்கும்.. என்பது மிர்தாதின் சூட்சுமம். நான் அப்படி என்றால் நீங்களும் அப்படியே. படியுங்கள்.. படிக்க படிக்க இப்புத்தகம் இன்னும் தன்னை முழுதாக மாற்றி அமைத்துக் கொள்ளும் மாய தத்துவத்தை எப்பக்கத்திலும் வைத்திருக்கிறார் நெய்மி. மிகப் பெரிய அச்சத்தின் போர்வையை இப்புத்தகம் விலக்கிக் கொண்டே வருவதில்.. கடைசிப் புள்ளிக்குள் நீங்களே நிறைந்து சுழலுவதைக் காண முடியும்.. காணுதலின் சுகத்தை கண்ட பின்தான் முழுமையாகும் காட்சிகள்.. அது, அகம் நிறைத்த சூழ்ச்சிகள்.

“அன்பிற்கான திறவுகோல் புரிதல்” என்கிறார்.. புரிய புரிய தான் புரிதலின் நீட்சி அன்பின் சுவடை.. பிரதிபலிக்கும்.. தேக மார்க்கத்தின் மாறுபட்ட கனவுக்குள் யாவையும் நிவர்த்தி செய்யும்.. கோட்பாடுகளை அன்பே செய்யும்.. அன்பே நெய்யும்.. அன்பே கொய்யும்.. அன்பே.. நீயும்.

எல்லா பொருளும் மனிதனுடன் இணைக்கப் பட்டிருக்கின்றன. அப்படியே எல்லா மனிதனும் ஒரு பொருளுடன் இணைக்கப் பட்டிருக்கிறான்..

“பிரபஞ்சமே ஒற்றை உடல்” என்கிறது மிர்தாத் புத்தகம்.

அது வினைக்கும் எதிர் வினைக்கும் இடையில் நிற்கிறது.. சரி என்று நீங்கள் நம்புவதை தவறென்று சுலபமாக சொல்லி விடுகிறது.. நிழல் தேடுவதை நிஜம் ஆக்கி விடுகிறது..இங்கு மகிழ்ச்சிக்கும் துன்பத்துக்கும் ஒரே அர்த்தம்தான்.. அது பொருள் மாற்றி மனிதம் மாற்றி உங்களை சிந்திக்க தூண்டுகிறது.. உங்களை உங்களில்தான் நீங்கள் கண்டடைய முடியும். எந்த கடவுளிடமும் அல்ல என்று மலை உச்சியின் வீழ்ச்சியைப் போல.. அழுத்தம் தாளாமல் வெடித்து சொல்கிறது. வெடித்து சிதறுகையில்தான்.. எதிர்வினைகளுக்கு முந்தைய வினைகள் பற்றிய சிந்தனை பிறக்கிறது.. மரணத்தின் வாழ்வுதனை ஜனனத்தின் வாயிலாகவே நிரூபணம் செய்யப் படுகிறது. பிறப்புக்கு முந்தைய மரணத்துக்கு பிந்தைய ஞாபகத்தின் சூத்திரத்தை நீங்கள் உணர உணர ஒரு மாபெரும் மறதிக்குள் சென்று விடும்.. முழுமையடைதலை இப்புத்தகம் பேசுகிறது.

“மாபெரும் வீட்டு ஏக்கம் மூடுபனி போன்றது” என்கிறது மிர்தாத் புத்தகம்.. அது மனதின் மூடல்களை பற்றி சிந்திக்கிறது.. மனதின் ஆழம் பற்றி தோண்டுகிறது.. அது.. மனதின் நிறம் பற்றி செயலாற்றுகிறது.. மனதின் வழிகளும்.. வலிகளும் பற்றி உரையாடுகிறது..மிகப் பெரிய நம்பிக்கையை அது உங்களுக்குள் ஊற்றுகிறது.. உங்கள் அழுகையின் ஒவ்வாமையை உங்களிடமிருந்து வெளியேற்றுகிறது..

“இப்படித்தான் நோவாவுக்கு உபதேசித்தேன்..அப்படியே உங்களுக்கும் உபதேசிக்கிறேன்..” என்கிறார் மிர்தாத்..அது எவ்வளவு உண்மை என்று மீண்டும் ஒரு முறை இப்புத்தகத்தை படிக்கையில் உணர்கிறேன்.. உணர்வின் சாலச் சிறந்த உன்மத்தத்தை நம்மை சுற்றி ஒரு

நெருப்பாய் எரியவிடும் மிகைல் நெய்மியை மிரட்சியுடன்தான் உள் வாங்குகிறேன்.. தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை வெகு நுட்பமாக அற்புதமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.. இப் புத்தகத்தை படிப்பது எவ்வுலகில் எனக்கு அளிக்கப் பட்ட மிகப் பெரிய வாய்ப்பாகவே நம்புகிறேன்..ஒவ்வொரு முறை படிக்கையிலும்.. நிறைந்து வழியும் அன்பின் ரசத்தை நான் மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்கவே விரும்புகிறேன். அதன் நீட்சியின் பெரும்பங்காகவே.. விழித்திருத்தலில் உழைத்து பிழைத்துக் கிடக்கும் இக் கட்டுரையின் தோரணங்கள்..அதன் காரணங்கள்.

“பிரபஞ்ச பெருவெளியும் அதில் உள்ள எல்லாமும் ஒரே ஒரு கரு.. காலம் அதை மூடியிருக்கும் ஓடு.. அதுதான் தாய்க்கரு” என்கிறார் மிர்தாத்.. தலை சுற்றி விழுந்து விடுவது மேல் என்று நம்பும் அளவுக்கு எனது பூமி சுற்றுவதை நான் உணர்கிறேன்.. அது இந்த பிரபஞ்சத்தின் வாசல் தொட்டு தொட்டு விளையாடும் அதி வேக நுட்பக் கலையை அத்தனை இலகுவாக செய்வதில்.. நான் என்ற ஒற்றை தர்க்கம் சற்று வெளியேறி.. ஒளியாகிட விரும்பும்.. தூரத்து நிமித்தங்களுக்குள் யாவும் சேர்ந்து விடுவதை மறுக்க விரும்பவில்லை..மறுத்தாலும்.. வெதும்புவதில்லை.. இல்லைக்குள் இருக்கும் இருப்பதை இருக்கும் என்றே நம்பிட வழி செய்யும்.. இல்லாமையின் சூன்யத்தின் அருகாமையை தூரத்து நட்சத்திரம் ஒன்று புரிய செய்யும் பொருள் படும் மினுங்கலை உயிர் கொண்டு உணர்த்துவதாகவே கோட்பாடு செய்கிறது மிர்தாத்.

“உலகிற்கு வெளிப்படுத்தலாம் என்று எனக்கு அனுமதிக்கப்பட்ட புத்தகத்தின் பகுதி இத்தோடு முடிகிறது..மிச்சத்திற்கான காலம் இன்னும் வரவில்லை..” என்று முடிக்கும் ‘மிகைல் நெய்மி’ ஒரு தொடக்கமாகவேதான் எனக்கு தோன்றுகிறார்.. கலீல் ஜிப்ரானின் நெருங்கிய தோழரான இந்த லெபனான் நாட்டு எழுத்தாளர் எழுதிய முதல் புத்தகம் இது..சிக்கல் நிறைந்த மொழி நடையில் எழுதப்பட்ட இந்நூலை தமிழுக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கும் அறிய நிகழ்வை நமது “அய்யா புவியரசு” செய்திருக்கிறார்.. அவர்தான் செய்திருக்க முடியும் என்று முழுதாக நம்புகிறேன்..உங்களுக்கு பசிக்கிறதென்றால் இப்புத்தகத்தை படித்தே தீர்வீர்கள்.. பசி கொண்டவன்.. வாழக் கடவன்.. என்பது நியதி.. அதுதான் மிர்தாத் புத்தகம்..

“இந்தக் கனிகள் வேண்டுமென்ற பசி யாருக்கெல்லாம் உண்டோ அவர்களெல்லாரும் தமது கூடைகளை ஏந்தி வாருங்கள்” என்கிறார் மிர்தாத்..அதை புவியரசின் மொழியின் மூலம் இன்னும் நெருக்கமாய் கண்டடைகிறோம்.. அது விதிக்கப் பட்டவை..

“இதைப் படிக்காமல்..படித்து முடிக்காமல் விட்டு விடாதீர்கள்.. அவ்வாறு செய்தால்.. அது உங்களை நீங்களே அவமதித்துக் கொண்டதாக ஆகிவிடும்“ என்று கூறும் புவியரசின் தேடலில் இது மிகச் சிறந்தது என்று கூறும் நாம் இதோ இன்னொரு முறையும் தேடிக் கொண்டுதான் இருக்கிறோம்..

நெய்மியின்.. சிந்தனை நம் மொழிக்குள்..நடமாடுகிறது..அது பெருங்காட்டு தீவிரத்தின் மிகப் பெரிய வாசலை நமக்கு திறந்து விடுகிறது..


மிர்தாத்தின் புத்தகம்

மூலம் :மிகைல் நெய்மி

தமிழில் :புவியரசு

கண்ணதாசன் பதிப்பகம்

விலை : ரூ.170/ ❑



# புயல்

ஒரு வாரகாலமாக அகோரமான மழைபெய்தது. இலைகள் துளிர்த்த மரங்களை வீசியடித்து விளாசியவாறு சூறாவளிப் புயற்காற்றும் தாக்கியது. அது சற்றுஓயும் மீண்டும் வேகங்கொண்டுவீசும்.

குளிராலும் மழைநீராலும் நோர்வே ஒஸ்லோ நகரமே பொருமிப் புடைத்துப் போய்விட்டது. ஏற்கனவே கொரணாநோய் அச்சுறுத்தலாலும் சமூகயிடைவெளிச் சட்டத்தாலும் மனிதநடமாட்டம் குறைந்துபோன நகரத்தெருக்கள்.. இத்திடீர் மழையின் அட்டகாசத்தாலும் புயலின் அச்சத்தாலும் மனிதநடமாற்றமே இல்லாது வெறித்துக்கிடந்தன.

கேசவன் தனது நண்பன் கிருபாகரனோடு ஏற்கனவே தொலைபேசியில் கதைத்துப் பொருந்திய திட்டத்தின்படி..

அவன் ஒஸ்லோ புகையிரதநிலையத்தில் வந்துநின்றான். இருவரும் வாய்மூடியணிந்தபடி நின்றதால் பெரிதாகக் கதைக்காது காரில்வந்து ஏறினார்கள்.

கிருபாகரன் வெகுமெதுவாக நிதானமாகக் காரைஓட்டியவாறு.. தனது வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

இருவரும் உள்ளேவந்து இருக்கைகளில் அமர்ந்ததும் கேசவன் தனது நிலமையைப் புரியவைக்கும் நோக்கமாகக் கதைக்கத்தொடங்கினான்.

நான் இருக்கிறதுக்கு அமைதியான வீடுதேவைப்படுகிறது. என்னட்டைப்போதிய பணமிருக்குது. இனிமேல் நான் ஒஸ்லோவில்தான் இருக்கப்போறன்.

என்ரை அப்பாவோடை ஏற்பட்ட கோபப்புயலால் அருமையான அம்மாவையும் தம்பியையும் பிரிந்துவந்த கவலையைத் தேற்றுவதற்கு எனக்குத் தனிமை தேவைப்படுகிறது. அமைதி அவசியமாகிறது. உன்னைவிட இங்கையெனக்குத் தெரிந்தவர்கள் எவருமில்லை. நீதான் அதற்கான ஒழுங்குகளைச் செய்துதரவேணும்.

என்றவனின். மனநிலமை குழப்பமாக இருப்பதை அவதானித்த கிருபாகரன் அவனைத் தட்டிக்கொடுத்துச் சாந்தப்படுத்தியவாறு..

இது என்ரை சொந்தவீடுதான். இங்கை நீயிருக்கலாம். நாங்கள் மேல்மாடியில்தான் இருக்கிறோம். உன்னை நான் கவனிக்க இதுதான் நல்லயோசனை. இது கொரணா நோய்த்;தொற்றுக் காலமென்பதை மறந்துவிடாதே.

இந்தக் கீழ்வீட்டில் ஒருபெண்ணையும் அவளின் சிறுவனையும் குடியிருத்தியிருக்கிறோம்.

இது இரண்டு குடும்பத்தவர்கள் குடியிருக்கக்கூடியதாகவே வடிவமைக்கப்பட்டது.

கேசவா! நீயிந்தப்பக்கத் தொகுதியில் தங்கலாம். இங்கே கழிவறை குளியலறை குசினி எல்லாம் உண்டு. வரவேற்பறைமட்டும் பொதுவானது.

கிருபாகரன் கூறிமுடித்ததும் சற்றுநேரம் யோசித்தவன்

நான் இந்தப்பகுதியில் தங்குவதற்கு அந்தப் பெண்சம்மதிப்பாளா..

என்று கேட்கவும் சிரித்தநண்பன்

அதை நான் பார்த்துக்கொள்ளுவன். நீ தயக்கமில்லாமற் தங்கலாம். இன்று உனக்கும் சாப்பாடு தயாராகவுள்ளது. சாப்பிட்டுவிட்டுக் கதைப்போம். வாமேல்மாடிக்கு.

என்று சொல்லிவிட்டு அகன்ற நண்பனைத்தொடர்ந்து கேசவனும் நடந்தான்.

வடநோர்வேயிலுள்ள துறம்சோ நகரத்தில் பிறந்ததிலிருந்து வாழ்ந்துவந்த கேசவன் அவனின் தாய்தந்தை சகோதரனோடு ஏற்பட்டுவந்த மனமொவ்வாத் தகறாறுகள் வளர்ந்து முற்றிப்போனதால் அவர்களை விட்டுப்பிரிந்து ஒஸ்லோ நகரில்வாழும் நண்பன் கிருபாகரனை நாடிவந்தவன்.

இவனின் தந்தையார் நாகலிங்கம் மீன்பிடிக்கப்பலில் வேலைசெய்வதால் கடலிலேயேதங்கித் தொழில்புரிந்து சிலநாட்களின்பின் கப்பல்கரைக்கு வந்துதரித்து.. அனைத்து வேலைகளையும் முடித்து.. லீவுகிடைத்ததும் வீட்டிற்குவருவார். சம்பளம் அதிகமாகக்கிடைக்கும் மிகக் கடினமான தொழிலிது.

மீன்களைவேட்டிப் பதப்படுத்தும் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தாயாரோடு இணைந்து கேசவனும் அத்தொழிலையே செய்தவன். அங்கு நல்லசம்பளம் கிடைக்கும். அதேதொழிலைச்செய்து சம்பாதித்தவர்கள் பலரும் நோர்வே தலைநகரமான ஒஸ்லோவில்

நல்லவீடுவாங்கிக் குடியேறி மகிழ்வோடு வாழ்கின்றார்கள்.

கிருபாகரனும் அவர்களைப்போன்று வந்தவன்தான். அவன் தன்குடும்பத்தாரோடு துறம்சோவில் வாழ்ந்தகாலத்தில் அவனோடு ஏற்பட்ட நட்பினால்தன் கேசவன் அவனைத்தேடி வந்துள்ளான்.

குளிர்வருத்தும் இந்தக்கஸ்டமான தொழிலைத் தொடர்ந்து செய்யாது இதைவிட்டுவிலகி ஒஸ்லோவிற்குக் குடிபெயர்வோம். என்றுகூறிய கேசவனின் வார்த்தையால் கோபங்கொண்ட தந்தையார்..

வயதுவந்த பிள்ளைகளை வீட்டிலிருத்தி வைச்சிருப்பது இந்தநாட்டின் சட்டத்துக்கு முரனானது. நீ போகவிரும்பினால்போடா. எங்களைத் தெண்டிக்காதை.

என்றவர் கூறவும்; தாயார்பதறியழவும் மூண்டதர்க்;கவாதங்களால் தனது குடும்பவுறவைத் துறந்து அவன் வெளியேறியவன்.

காற்று யன்னலில் மோதியறைந்தது. அதன்மீது மழைநீரைத் தெளித்தது. இடிமின்னல்எழுந்தது. கேசவன் தனது இருக்கையிலிருந்து எழுந்துநின்றான். கதவோரம் எட்டிப்பார்த்தவாறுநின்ற அந்தவீட்டில்வாழும் சிறுவன் சிரித்தபடி..

அது இடிமின்னல் நீபயந்துபோனாயா.

என்று நொக்ஸ் மொழியில் கேட்டான்.

சாச்சா.. எனக்குப் பயமில்லை. நீவாவுன்னோடை பேசவேணும்.

என்று கேசவன் அழைக்கவும் சற்றும்தயக்கமின்றி உள்ளேவந்த அந்தச்சிறுவன் ஆசனமொன்றில் அமர்ந்துகொண்டான். புன்னகை ஒழுகும் அழகான முகம். அவனின் கண்கள் பிரகாசமாக ஜொலித்தன. தனது சுறுசுறுப்பான கைகளை அங்குமிங்கும் ஆட்டிக்கொண்டான்.

அழகானபையா!.. உனக்கு என்னபெயர் எத்தனைவயது.

என்று கேசவன் கேட்கவும். அவன் கண்களையுருட்டி யோசித்துவிட்டு

நீயெனது நண்பன்தானே!.. உனக்குச் சொல்லலாம். எனதுபெயர் சலீம். வயது நாலு. அம்மாவின் பெயர் நேசமலர். அப்பாவின் பெயர் யூசுப்காதர். எல்லாமே சொல்லீட்டேனே.. என்றவன் சிரித்தபடி..

உன்ரைபொயர் கேசவன்தானே! அம்மாதான் சொன்னவ.

என்றுகூறவும்.. அவனைத்தேடியவாறு அவனின் தாயாரே அங்குவந்து நின்றார். மன்னிக்கவேணும். இவன் சரியான வால். இடம்விட்டால் தோளிலை ஏறிவிடுவான்.

என்று அழகான யாழ்ப்பாணத் தமிழில் கதைத்த அந்த இளம்பெண்ணை வியப்போடு கேசவன் நோக்கவும்..

உங்களைப்பற்றிக் கிருபாகரன் சொன்னவர். எங்கடை பாரம்பரிய இனத்தைச்சேர்;ந்த ஒருவர் பக்கத்து அறைத்தொகுதியில் இருக்கவந்தது வலுசந்தோசம்.

இவன்தான் அடிக்கடிவந்து கதைத்து உளறுவான். நான் இவனைக் கண்டித்து அடக்குறன்.

என்றுகூறியவள் சலீமைப்பிடித்து இழுத்தவாறு விடைபெற்றுச் சென்றாள். அவளை விலத்திக்கொண்டு உள்ளேவந்த கிருபாகரன்..

பக்கத்து வீட்டுக்காரி வந்திட்டுப்போகின்றாள். கதைத்தீர்களா.. பாவம் எங்கடை உறவுக்காரப் பெண்பிள்ளை. அவளின் வாழ்க்கை சீர்கெட்டுப்போச்சுது. அவளொரு ஈராணியனை முடித்ததால் தாயும் தகப்பனும் கோபங்கொண்டு தாறுமாறாகத்திட்டி அவளைத் தள்ளிவைத்திட்டினம்.

அவள் முடித்தவனும் சரியானவனில்லை. கூட்டத்ழி;தாடு சேர்ந்து தினமும் அவன் குடித்ததினால் வருத்தம்வந்து செத்துப்ழி;பானான்.

இந்த நேசமலர் எனது மனைவியின்ரை ஒன்றுவிட்ட சகோதரி. அவர்தான் இவளை ஆதரித்து இங்கைகூட்டிவந்து குடியிருத்தியவர்.

ஒரு கடையில் இந்தப்பெண் வேலைபார்த்தவர். அங்கு கடமையிலிருந்தவர்கள் இரண்டுபேருக்கு கொரணா நோய்த்தொற்று வந்ததால் அந்தக்கடையைப் பூட்டிவிட்டனர்.

வேலையும் போய்விட்டது. வீட்டில்தான் இருக்கிறாள். அவளின் தலையெழுத்து இப்படியாச்சுது..

ஊரடங்குச் சட்டத்தாலை வெளியில் கடையெல்லாம் பூட்டப்பட்டிருக்குது. இப்போதைக்கு உனக்கும் சாப்பாடு எங்களோடைதான். வாமச்சான் கூச்சப்படாமல்.

என்று சொல்லிவிட்டுக் கிருபாகரன் சென்றான்.

தலையெழுத்தும் மண்ணாங்கட்டியுமென்று புறுபுறுத்தவன் எழுந்துசென்று உபசரிப்பு மண்டபத்திலுள்ள மேசைக்கதிரையில் வந்திருந்தான்.

ஏதோவொன்றைத் தொலைத்தவன்போல் களைப்படைந்து தோன்றியவனை அந்தப் பெருமழையின் குளிரும் வருத்தியது. அவனுக்குத் தேனீர் தேவைப்படுகின்றது. சூடாக அதையுறிங்சிச் சுவைக்க மனம் ஏங்குகின்றது.

தனது அறைக்குள்ளேயிருந்து வெளியேவந்த நேசமலர் அவனைப்பார்த்துவிட்டுத் திரும்பிப்போனவள். சற்றுநேரத்தில் சூடுபறக்கும் தேனீர்கோப்பையோடு வந்தாள். அதை அவள் அவனிடம் நீட்டவே.. அசந்துபோனவன் ஆவலொடு அதைவாங்கிப் பருகுகினான்.

மின்னியங்கிப் பொம்மைபோன்று அவள் செயற்படும் சுறுசுறுப்பானது அவனுக்குப் பிடித்திருந்தது. இளமைமூடிய அவளின் உடலும்.. பழகவினிய மனமும்.. அவளின் வாழ்வில்லேற்பட்ட இழப்பினால் பாதிக்கப்படவில்லை.

பறவையுதிர்த்த இறகைப்பேன்று அவற்றைப்பற்றி அவள் கவலை கொள்வதில்லையோ என்று கேசவன் நினைத்தான். கவிஞர் இப்சன் கண்டதொரு வீரப்பெண் இவள்தான். என்ற மரியாதைமிகு முடிவுக்குவந்த கேசவன் அவளிடம் வெகுவிருப்பமோடு பழகமுயன்றான்.

பரிசுத்தமான ஒருபார்வை. சின்னதாய் புன்னகை. சினேகம் ஒழுகும் ஓர்சில வார்த்தைகள் என்று நேசமலர் தன்னோடு பழகுவதை அவனின்மனம் பாராட்டியது.

எழுந்துசென்று வெற்றுத் தேனீர்க்கோப்பையை அவளிடம் கொடுத்து நன்றிகூறியவிட்டு அவன் தனது அறைக்குள் வந்தபோது.. தொலைபேசியில் தாயார் அழைப்பதை அவதானித்தவன்

ஆவலோடு அவரோடு கதைத்தான்.

கேசவா! கிருபாகரன் எங்களோடு கதைச்சவர். நல்லபிள்ளையவர். நீயவரோடு உங்கை-யிருப்பாதாகச் சொன்னவர். எங்களுக்கு நல்லசந்தோசம். அரோடையேயிரு. அது எங்களுக்கும் நிம்மதியைத்தரும். வேறையிடத்துக்குப் போகாதை. கிருபாவோடை இருப்பதுதான் உனக்குப் பாதுகாப்பானது.

இதுவரைகாலமும் உனக்குத்தெரியாத விசயமொன்றைச் சொல்லிறன்கேள். உங்கடை அப்பா நாட்டிலை நடந்த போரினால் கணவரை இழந்துவாழும் வலுபின்தங்கிய கிராமத்திலுள்ள மூன்று ஏழைப்பெண் விதைவைகளின் குடும்பங்களைப் பொறுப்பேற்று அவர்களுக்கு உதவிவருவதால் அவருக்கு அதிகம் காசுதேவைப்படுகின்றது.

நாங்கள் இங்கையிருந்தால்தான் கனகாசு உழைக்கமுடியும். சொகுசாச் சீவிக்கிறது க்காக நாங்கள் ஒஸ்லோவுக்கு வரமுடியாது.

எங்களைப்பிரிந்து நீபோனது அப்பாவுக்குக் கவலை. நீயவரோடை ஆறுதலாய் கதைக்கவேணும். உடம்பைப்பாத்துக்கொள்.

என்று கூறியவர் தொலைபேசியை நிறுத்திக்கொண்டார்.

தனது அப்பாமேல் கேசவன் கொண்டிருந்த கோபப்புயல் தணிந்தவனாய்.. கருணைமிகக் கொடையாளரான அவரைப்பற்றி அறிந்துகொள்ளாதால் அவரையெதிர்த்துத் தான் தற்கமிட்டதற்காக வருந்திக் கண்கலங்கினான்.

தினங்கள் நகர்ந்தன. அந்தவீட்டுச்சிறுவன் சலீம் கேசவனோடு நன்றக ஒட்டிவிட்டான். தாயார் தயாரிக்கும் பலகாரங்களை உண்ணுவதற்காக மண்டபத்திலுள்ள பொதுமேசைக்குக் கேசவனையும் இழுத்துவருவான்.

சிக்கனமாய்ப்பேசும் நேசமலர் உபசரிப்பில்மட்டும் தாராளமாய் நடந்துகொள்வாள். தளிர்க்கரங்களாள் தானேயள்ளிப்போட்டுச் சாப்பிடுமாறு வற்புறத்துவாள். அவளின் அன்பின் திணிப்பால் திணறிப்போவன் கேசவன்.

இவ்மூவரும் சேர்ந்திருந்து சிரித்தப்பேசி.. உணவை இரசித்து உண்பார்கள். இந்தநிகழ்வு அடிக்கடிதொடரவே.. அவற்றையெல்லாம் பார்த்து நண்பன் கிருபாகரனும் அவனின் துணைவியார் மாலதியும் மகிழ்ந்தனர்.

அந்த அருமந்த நினைவுகள் ஒவ்வொன்றும் மனத்துள் மீளோட்டம்போடவே.. அவனின் பொழுதுகள் கற்பனைகள் நிறைந்த ஒருசுகத்தை தனக்குள் விதைத்துக் கொண்டிருப்பதை கேசவனால் உணரமுடிந்தது. நேசமலர் அவனின் கனவுகளிலும்வந்து தோன்றினாள்.

காலமாற்றம் கடுகதியில் நிகழ்ந்தன. சூரியனின் உஸ்ணக்கதிர்கள் குதூகலத்தை ஊட்டியன. மரங்கள் பூத்தன. வசந்தம் மணந்தது. மனமொப்பிய காதலைக் கேசவன் நேசமலரிடம் கூறி-விட்டான். அவள் நாணப்படவில்லை. நிதானமாக யோசிப்பவள்போல் தோன்றவே.. கேசவன் விலகிச்சென்றபோது அவனைநிறுத்தித் தனது சம்மதத்தை அவள் தெரிவித்தாள்.

கிருபாகரனும் மனைவியும் பிள்ளைகளும் சூழ்துமகிழவே.. கேசவனும் நேசமலரும் திருமண மோதிரம் மாற்றிக்கொண்டனர்.

❑

# வானம்

● பாரியன்பன் நாகராஜன்

ஆனந்தக் கண்ணீராய்
மழை பொழியும்.
வெப்பம் தருவதாய்
மண் பிளக்கக் காயும்.
வெளிச்சம் தரும்
இருட்டை உமிழும்.
சூரியனை ஏழு குதிரைகள்
பூட்டிய ரதத்தில்
பவனிவரச் செய்யும்
அதை
இரவு தோறும் ஒளித்து வைத்து
பூமியுடன்
கண்ணாமூச்சி ஆடும்.

நிலவைக் கூட்டும் குறைக்கும்
முழுமதி ஆக்கும்.
ஒருநாள் காணாமல் செய்யும்.
பகலில்
நட்சத்திரங்களைத் தின்று
இரவில் கக்கும்.
விரும்பினால் மேகங்களை
ஆடையாய் அணியும்
இல்லையேல்
அம்மணமாய்க் கிடக்கும்.
அதனிடமுள்ள
நிறங்களைக் கொண்டு
தூரிகையின்றி நவீன ஓவியங்கள்
தீட்டிக் கொள்ளும்.


காலையும் மாலையும்
பூப்பெய்திய பெண்ணாய்
மஞ்சள் நீராடும்.
வழக்கமாக நீலப் பௌடரில்
ஒப்பனைச் செய்து கொள்ளும்.
மின்னல் கோலம் போடும்
இடி என்ற பேரில்
சிம்மமாய்க் கர்ஜிக்கும்
மதம் பிடித்த வேழமாய்ப் பிளிரும்.
ஏழு வண்ண வில்லுக்கு
பூமியை நாணாக்கும்.
வனங்களோடு பேசும்
மலைகளோடு கொஞ்சும் குலாவும்.
உருவமற்ற காற்றுக்குத் தாய்வீடாகும்
மாசுக்கும் தூசுக்கும்
பகையான நீச்சவீடாகும்.

ஓர் எல்லைவரை
பறவைகளைப் பறக்க விட்டு
தாதியாய்த் தாலாட்டும்.
விமானங்களைப் பாதையின்றி
பயணிக்கச் செய்யும்.
செயற்கைக் கோள்களையும்
ஏவுகணைகளையும்
தாய்மடியாய்த் தன்கூட்டுக்குள்
மறுப்பின்றி அனுமதிக்கும்.

பார்ப்போரை ஆச்சரியத்தில்
வியக்கச் செய்யும்.
விஞ்ஞானிகளுக்குத் தீர்வில்லா
தேடலைத் தரும்.
அறிவியலார்க்கு
அள்ள அள்ளக் குறையாத
அதிசய அட்சயப் பாத்திரம்.
ஜோதிடர்களுக்கும் சாஸ்திர வல்லுநர்களுக்கும்
கோள் மண்டலம்.

கருவறையின்றி பிறந்த
ஓர் ஆதித்தாய்க் கடவுள்.
பல கோடி ஆண்டுகளாகியும்
இறக்கும் வரம் வாங்கி வராத ஒற்றை ஜீவன்.
அது..
மரணித்தவருக்கு விண்ணுலகம்
ஆத்தீகருக்கு தேவலோகம். ❑

● கல்மதுரை திமோ



# அவர்கள் வாயைப் பிளந்தார்கள்..!

அவர்கள்
சொகுசாக சோம்பலை
களைத்துக்கொண்டிருக்க
இவள் மட்டும்
இருளில் வளைக்கப்பட்டிருந்தாள்.

படிப்பறியாத இவளைக் குடித்து
அவர்கள் பட்டம் படித்தார்கள்..

இவளின்
தேய்ந்து கிழிந்த
சேலையில் நூல் பிரித்து
புதிய ஆடைகள் தைத்தார்கள்..

இவளின்
பட்டினியில்
கொழுத்துப் போனார்கள்..

அவர்களை எழுதிய இவளும்
முன்னொரு பருவத்தில்
பூத்துக்குலுங்கி வாசம் வீசியவள் தான்.


இன்று
இவள் ஈன்ற அவர்களால்
இதழ்கள் கொட்டிய செம்மல் ஆகிறாள்
அனாதைகள் இல்லத்தில்.

அழாதே என்று
ஆறுதல் சொல்ல இங்கே நல்ல
நாவுகள் இல்லை.
வழியும்
கண்ணீரைத் துடைக்க ஒரு
நாதியும் இல்லை.

இவள்
சமைத்துவைத்த
ஒய்வூதியத்தை தின்ன மட்டும்
இத்தனை வாய்களா..?

ஆம்
இவளின் வாரிசுகள் எனச்
சொல்லிக்கொண்டு
அவர்கள் வாயைப் பிளந்தார்கள்..! ❑

● சங்கரி சிவகணேசன்



# மாற வேண்டியது காலமல்ல மனிதர்கள் தான்..

நீங்கள் நடந்த பாதைகளில்
அவளை நடக்கச் சொல்லி
சிறு வட்டத்துக்குள் கட்டிப்போட
நினைக்கிறீர்கள்
பதற்றத்தோடு ஆயத்தமாகிறாள்..

சுட்டெரிக்க சுட்டெரிக் உயிர்த்தெழும்
பீனிக்ஸ் பெண்களைக் கண்டு
சூரியனே முகில்களின் பின்னால்
ஒளிந்து கொள்ளும் இவ்யுகத்தில்..!

நேற்று வரை அவள் பட்டாம் பூச்சி
இன்று முதல் கூட்டுப்புழுவாக்கி
கூர்ப்பை கூட மாற்றிப் போடுகிறீர்கள்,
மாற்றங்களை மௌனித்து மெல்கிறாள்..!

தேவதை அவள் என்று திருஷ்டி
கழிக்கிறீர்கள்..
அவள் முதுகில் அரும்பிய
சிறகுகளை கத்தரித்தபடி..!

அவளுக்கான வானத்தில்
மிதந்து கொண்டிருந்த
அவள் கனவுகளுக்கு
கடிவாளம் போடுகிறீர்கள்..!


உடலுக்கு ஊட்டமென
உணவுகளை பார்த்து பார்த்து
ஊட்டுகிறீர்கள்
உள்ளத்தை பலவீனப்படுத்தி
அச்சத்தை விதைத்தபடி..!

உங்களின் பஞ்சாங்கத்திற்கும்
அவளின் சுயத்திற்கும்
நடுவில்
ஓலமிடுகிறது அவள் ஆன்மா
மெல்ல மெல்ல
உடைந்து கொண்டிருக்கிறாள்
இல்லை இல்லை
நொறுங்கிக் கொண்டிருக்கிறாள்..

நீங்கள் ஆசுவாசம் அடைகிறீர்கள்..

மாறவேண்டியது காலம் அல்ல
மனிதர்கள்தான்.. ❑

● கா.ந.கல்யாணசுந்தரம்



# ஹைக்கூ..

முறிந்த கிளையொன்றைத்
தாங்கிப் பிடித்தது
மரத்தின் மற்ற கிளைகள்

❍

மாட்டு வண்டியின் ஓட்டத்திலும்
நெளிந்தபடி அறிவுறுத்தியது
அச்சுமுறிந்த சக்கரம்

❍

செருப்பின் சத்தம்
அடையாளப் படுத்துகிறது
அப்பாவின் வருகையை

❍

கட்டளையின்றித் தவறாமல்
கொட்டிலுக்கு வந்தன
மந்தைவெளி சென்ற மாடுகள்

❍

ஊருக்கே ஒலிஎழுப்பி
அறிவொளிக்கு அழைப்பு விடுக்கிறது
பள்ளியின் தண்டவாளத் துண்டு

❍

சுத்தம் செய்யாமல் விடுங்கள்
வேர்களுடன் உறவாடுகிறோம்
உதிர்ந்த மலர்கள்

❍

குழந்தைக்கு சோறு உட்டும்போது
தவறாமல் வருகிறான்
கோணிப்பைக்காரன். ❑



# என்னை யாரென்று எண்ணி எண்ணி

*விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்கிடாது என்பார்கள் இப்பொழுது நானிருக்கும் நிலையை நீங்கள் பார்த்தீர்களென்றால் அது உண்மைதானென்று சத்தியமே செய்து விடுவீர்கள்.*

அரண்மனையை விடவும் விசாலம் கொண்ட இதயவீடுகளிலும், கோவைக்கனியை விட சிவந்த நிறம் கொண்ட வெல்வெட் இதழ்களிலும் கவர்ச்சிகரமாக புரண்டு கொண்டிருந்த நான் இப்போது எங்கிருக்கிறேனென்று தெரியுமா?

தன் உடலையே கரங்களாக விரித்து வானத்தை நோக்கி தொழுகை நடத்திக்கொண்டிருக்கிறதே அதோ அந்த முற்றிய வெள்ளை எருக்குச்செடி, அதன் பச்சை இலை ஒன்றின் மேல் தான் நான் சிறு பூச்சி போல உருண்டு கொண்டிருக்கிறேன்.

நான் யாரென்று கேட்கிறீர்களா? கொஞ்ச நேரத்தில் என் ஜாதகத்தையே தெரிந்து கொள்ளத்தானே போகிறீர்கள்.. இப்போது என் நிலையை கொஞ்சம் யோசியுங்கள்

நானோ மிகவும் பலவீனமானதொரு வஸ்து.கொஞ்சம் தடித்த காற்றசைவில் தப்பித்தவறி விழுந்து விட்டேனென்றால், அய்யோ அவ்வளவு தான் அடுத்த நொடி அதல பாதாளத்தில் பாய்ந்து விடுவேன். பிறகென்ன தட்டான் சிறகுகளை விடவும் மிகவும் மென்மையான எனதுடல் இலையிலிருந்து நழுவி இரண்டடி அந்தரத்தில் பயணித்து பூமியின் மீது சாஷ்டாங்கமாக தலைகுப்புற விழுந்து புழுதி மண்ணை முத்தமிட்டால் எப்படி இருக்கும் என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்

அதனால் தான் எந்த சாகசத்திற்கும் ஆட்படாமல் சொர சொரப்பான பச்சை ரேகைகள் ஓடும் இந்த இலையின் உள்ளங் கையில் கிடந்து விதியே என்று தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்.

நீங்கள் என் மீது பரிதாபங் கொள்வது கூட எனக்குப் புரிகிறது. ஆனால் எனக்கென்று யார் இருக்கிறார்கள் சொல்லுங்கள்? யாராவது அன்புள்ளம்

கொண்டவர்கள் எனக்கு உதவ வேண்டும். (அது நடக்காது. சில அன்புள்ளம் கொண்டவர்களும் நான் யாரென்று தெரிந்தால் முகத்தை சுழித்துக் கொண்டு சென்று விடுவார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.)

சரி யாரும் உதவ வரவில்லையென்றால் என்னைப் பிரசவித்தவன் தானே என்னை அழைத்துச் செல்ல வேண்டும்?. அதுதானே உலக நியதி. ஆனால் அவனே என்னை அம்போவென்று விட்டு விட்டு சென்று விட்டான்.

பெற்ற குழந்தையை பெற்ற தாயே குப்பைத் தொட்டியில் தூக்கிப் போட்டுவிட்டுப் போன கதையாக இருக்கிறது எனது கதை.

ஆமாம் என்னை படைத்தவனே இப்படி என்னை எதிர் வீட்டு முற்றத்தில் திருஷ்டிக்காக நடப்பட்ட வெள்ளெருக்கின் பச்சை இலையில் ஒரு புழு போல நெளிய விட்டுச் சென்று விட்டான்

சொல்லுங்கள் நீங்களாக இருந்தால் பிறந்து இன்னும் ஒரு நாள் கூட நிரம்பாத சிசுவை இப்படி வெயிலென்றும் மழையென்றும் பாரமல் வீதியில் தூக்கி விட்டெறிந்து விடுவீர்களா? என்னதான் விசயம் சொல்லென்று நீங்கள் கேட்பது எனக்கு புரியாமலில்லை

நடந்தது இதுதான், அதோ அந்த எதிர் வீட்டில் வசிக்கிறார்களே அந்த புத்தம் புது இளம் தம்பதிகள் அவர்கள் தான் ஒரு வகையில் எனக்கு பெற்றோர் ஆகிறார்கள் என்றால் நீங்கள் நம்புவீர்களா?. ஆனால் அவர்கள் தான் நான் இங்கே இந்த நிலைமையில் தவிப்பதற்கு காரணமென்று சொன்னால்நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும்.

அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு அன்னியோன்னியமாய் வாழ்கிறார்கள் என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்தது தான் அதனால் தான் சொல்வதற்கே எனக்கு தயக்கமாகவும் இருக்கிறது.

இன்று மதியமெல்லாம் இருவரும் கூடிக்குலவி கொஞ்சிக் கொண்டும் அவ்வப்போது ஒருவரை ஒருவர் சீண்டிக்கொண்டும், தித்திக்க தித்திக்க

முத்தமிட்டுக் கொண்டும் (அதாவது ஒருவர் இதழுக்குள் இன்னொருவர் நாவை விட்டு துழாவிக்கொண்டு) சரி சரி... விடுங்கள் நன்றாகத்தான்

பொழுது போய்க் கொண்டிருந்தது என்று நினைத்து சற்று கண்ணயர்ந்து விட்டேன்.

திடீரென்று என் தலையில் பாராங்கல்லைப்போட்டது போல் படீர் என்று ஒரு சத்தம் கேட்கிறது.

என்ன சண்டையோ போங்கள். சமையலறையில் பாத்திரங்கள் கடகடவென்று உருளுகின்றன. காற்று வந்து பொருட்களை இலேசான பொருட்களை கண்ணாபிண்ணாவென்று கலைத்துப்போட்டு உருட்டுகிறது. கதவு வேறு டப் டப்பென்று அடைத்து அடைத்து சாத்தப்படுகிறது.

அரைத் தூக்கத்தில் என் தலைமயிரை யாரோ கொத்தாகப் பிடித்து தூக்கி வருகிறார்கள் கடலின்ஆழத்திலிருந்து மேலே இழுத்து வருவது போல் தெரிகிறது. என்னிடம் இன்னும் விழிக்க திராணி இல்லை. சத்தியமாக இது அவன் தான்..

சொல்கிறேன் கேளுங்கள் என்னை இவன் இவ்வளவு சீக்கிரம் போய்வாவென்று விடைகொடுத்து அனுப்பி விடுவானென்று நான் நினைத்து கூடப் பார்த்ததில்லை. நான் பிரசவிக்கப்படுவதற்கு இன்னும் பலவருடங்கள் ஆகுமென்று தான் நம்பியிருந்தேன்.

ஆனால் கடைசியில் என்னை அவன் அவளை நோக்கி ஒரு சோழியைப்போல உருட்டி விடுகிறான். தலை சுழல வேகமாக சுற்றிக்கொண்டேயிருக்கிறேன்.

படு பாவிகளா சீக்கிரம் ஒரு முடிவுக்கு வாருங்களேண்டா?. ஒன்று அவள் என்னை எடுத்து மார்போடு அணைத்து முத்தமிட்டு இதயத்திற்குள் இட்டுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவன் என்னை அப்படியே ஒரு பனிப்பூவைப்போல கைகளில் ஏந்திச் சென்று நெஞ்சோடு சேர்த்திருக்க வேண்டும். என்னை படைத்ததையே அவன் மறந்து போய் விட்டான் போல ஞாபக மறதித் திலகம்.

இதோ பாருங்கள் இப்போது எல்லாவற்றையும் மறந்து விட்டு அவளோடு மறுபடியும் சரசமாட ஆரம்பிக்கிறான். மன்னிப்புகள்

உண்மையை சொல்கிறேன் எங்களுக்கு ஆகப் பெரிய எதிரியே மனிதர்கள் இட்டுக் கொள்ளும் இந்த முத்தங்கள் தான்.

நானும் பூஞ்சையான ஒரு ரயில் தட்டானைப்போல அவர்களை சுற்றி சுற்றி வருகிறேன். ஒன்று அவளுக்குள் புகுந்து கொள்ள வேண்டும். அல்லது அவனுக்குள். ஆனால் இவர்கள் தான் ஒரு அங்குல இடைவெளிகூட ஆலிங்கித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

நான் எங்கே பறந்து செல்வேன் சொல்லுங்கள். அகாலத்தில் இறந்து போன ஆத்மாக்கள்

*போல விண்ணையும் மண்ணையும் சுற்றி சுற்றி வரவேண்டுமா? என்ன கொடுமையிது.!*

*இந்த அவன் இருக்கிறான் பாருங்கள் அவன் என்னை என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறானென்று புரியவில்லை*

*மனதென்று ஒன்று இருக்கிறது இல்லையா? சொல்லப்போனால் அந்த மனத்தையும் வெளிப்படுத்துபவர்களே நாங்கள் தானே?*

*பார்த்துக்கொண்டேயிருக்கிறேன் சட்டை பொத்தான்களை பூட்டியபடியே அவளின் காதோடு காதாக ஏதோ கிசுகிசுத்து விட்டு, (அவள் அதற்கு சிரிப்பு இல்லாமல் அழுகை-யில்லாமல் ஒரு பாவனையை*

*வெளிப்படுத்தியபடியே கற்சிலை போல நிற்கிறாள்.நடிப்பின் நாயகி என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது) அவசர அவசரமாக வாசலுக்கு வந்து செருப்பை மாட்டிக்கொள்கிறான். ஒரு வேளை அவளை சமாதானப்படுத்த மல்லிகைப்பூ,பீட்சா,ஐஸ் க்ரீம் இப்படி ஏதாவது வாங்க வேண்டி கடைக்கு ஓடுகிறானோ என்னவோ?*

*ஏண்டா என்னை இப்படி அம்போவென்று விட்டு விட்டு ஓடுகிறாயே.இதனால்.எவ்வளவு ஆபத்து நேருமென்று கொஞ்சமாவது யோசித்தாயா?*

*நான் அவன் முதுகுக்குப் பின்னாலேயே ஒடி வந்து கொண்டிருக்கிறேன். அவன் என்னை திரும்பி கூட பார்க்கவில்லை. சரிதான் இவனை நம்பியது*

*தவறு என்று வீட்டிற்குள்ளேயே திரும்ப போய்விடலாமென்று வாசல் கதவுக்கு பறந்தோடுகிறேன். சரியாக நான் உள்ளே நுழைய எத்தனிப்பதற்கும் அவள் கதவை சட்டென்று அறைந்து சாத்துவதற்கும் சரியாக இருக்கிறது- நல்ல வேளை என் முகம் சிதையால்மல் தப்பியது கடவுள் புண்ணியம் என்று சொல்ல வேண்டும்.*

*உள்ளேயும் போகாமல் வெயியேயும் இடமில்லாமல் கடைசியில் என்ன செய்வதென்று நீங்களே சொல்லுங்கள். பார்த்தேன் அப்படியே காற்றோடு காற்றாக ஒரு சருகின் முதுகில் ஒட்டிக்கொண்டு வந்து இந்த எருக்கலை இலையில் அடைக்கலமாகிவிட்டேன்.*

*ஒரு மின்மினிப்பூச்சியின் எடையில் ஆயிரத்தில் ஒரு பங்கே இருக்கும் என்னால் எங்கே சுதந்திரமாக பறந்து செல்ல முடியும்?*

*அய்யோ இதுவும் சிறிது நேரத்தில் என்னை உணர்ந்து கொண்டு விட்டது போலும் என்னால் என்ன உறுத்தலோ இதற்கு? என்னை எப்படியாவது*

*தரையில் கவிழ்த்து விட்டு விடலாம் என்று பலவகைகளில் நெளிந்து கொண்டிருக்கிறது.*

*எனக்கு இதை விட்டால் வேறு நாதியில்லை. பக்கத்திலேயே ஒரு மஞ்சள் அரளி மரம் கொத்து கொத்தாய் மஞ்சள் அரளிப்பூக்களை*

*சொரிந்திருக்கிறது. அடடா கண்கொள்ளா காட்சி மாலை நேர மஞ்சள் வண்ண ஒளி ரேகைகள் போலல்லவா பூக்கள் சரம் சரமாக தொங்குகின்றன.*

*சற்று நேரத்திற்கெல்லாம் எங்கிருந்தோ பறந்து வந்த கருவண்டு ஒன்று பித்தான பாடலை பாடிக்கொண்டே (காதல் மயக்கத்தில் இருக்கிறது போலிருக்கிறது) ஒரு பூவைக்குடைந்து*

தன்னை அதற்குள் அமிழ்த்திக்கொண்டு காணமல் போகிறது. அடக்கடவுளே இது தான் பூச்சமாதி கொள்வதோ?

சிறிது நேரத்திற்கும் பின்னே எங்கிருந்தோ பறந்து வந்த குட்டியே குட்டியூண்டு கருப்பு தேன் சிட்டு ஒரு கிளையில் வந்து அமர்ந்ததும் தன் கொக்கி போன்ற கால்களை கிளையில் பிணைத்து குடை ராட்டினம் சுற்றுகிறது.

இந்த அணில் இருக்கிறது பாருங்கள் அணில் அதன் தொல்லை தான் எனக்கு தாங்க முடியாததாக இருக்கிறது - அநேகமாக அது தன் இணைக்கு இச்சையை ஒலிச் சமிஞ்ஞை மூலம் தெரிவிக்கிறது போல் இருக்கிறது. முதுகுக்குப் பின்னால் வாலை தூக்கி கொண்டு அது விச் விச்சென்று கத்துகிறது பாருங்கள். இந்த உலகத்தில் வேறு யாருமே நிம்மதியாக தூங்கிவிடக்கூடாதென்று கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறது போலல்லவா இருக்கிறது.?

அற்ப பதரே அதிகமாய் ஆட்டம் போடாதே என்று சொல்லலாமென்று தான் நினைத்தேன். சொன்னால் என் நிலைமை என்னவாகுமென்று எண்ணியதுமே பேசாமல் கப்சிப்பென்று இருந்து விட்டேன்.

சரி அப்படியே வலப்பக்கம் சரிந்தபடி போய் அங்கே பரந்து விரிந்திருக்கும் செம்பருத்தி இலையின் மீது ஒட்டிக் கொள்ளலாமென்றால் கண்ணுக்கு நேராக இன்று இரவு பூப்படைய தயாரக இருக்கும் ஒரு முதிர் மொட்டு என்னைப்பார்த்தபடியே இருக்கிறது.

அப்பப்பா இளஞ்சிவப்பு நிறத்தில் மெல்லிய வெண்நரம்புகள் ஊடாட உடம்பெல்லாம் திருகியபடி அப்பப்பா நீங்கள் மட்டும் இதைப்பார்த்தால் உங்களுக்கு ஒரு பருவப் பெண்ணின் புதைந்து திமிர்ந்த மார்புகள் ஞாபத்திற்கு வருவதை தவிர்க்கவே முடியாது.

அணில் செய்கிற அற்ப வேலையைப்பார்த்தீர்களா? என் மனதை கெடுத்துவிடும்போல் இருக்கிறதே..! நீங்கள் சிரிப்பது எனக்குப் புரிகிறது. எனக்கெல்லாம் என்ன பிரமாதமான மனதிருக்கப்போகிறது என்று தானே சிரிக்கிறீர்கள். நான் மட்டும் மனது வைத்தால் வானத்தை கூட வளைத்து விடுவேன் ஆனால் அதற்கு உரிய இடத்தில் நான் இருக்க வேண்டுமோ ...

அதை விடுங்கள், இப்போது என் கவலையெல்லாம் என் இருப்பு பற்றித்தான். ஒன்று என்னை பிரசவித்தவன் இங்கே தன்னிச்சையாக வந்து என்னை எடுத்துச் செல்லவேண்டும் (அதுவும் மன்னிப்பு கேட்க வேண்டும்)

அல்லது எவளிடம் என்னை அனுப்பினானோ அவள் என்னை ஏற்க மறுக்கும் பிடிவாதத்த விட்டு என்னை முத்தமிட்டு அணைத்து எடுத்துச் செல்ல வேண்டும் (பெண்கள் முத்தமிடாமல் எடுத்து சென்றால் நன்றாக இருக்குமா சொல்லுங்கள்)

அதுவரையிலும் என் வாழ்வு திரிசங்கு சொர்க்கம் தான் போங்கள். எப்போது பலத்த காற்று வீசுமோ? மேகம் வேறு கறுத்துக் கொண்டே

போகிறது. ஒரு அப்பழுக்கற்ற ஜீவன் இந்த பூமியிலிருந்து காரணமின்றி மறைந்து போக வாயு பகவானும் வருண பகவானும் விரும்புவார்களென்றா நினைக்கிறீர்கள்

என்னென்னவோ தைரியம் பேசினாலும் ஒரு பக்கம் பயம் உதைக்கத்தான் செய்கிறது.

இப்பொழுது உங்களுக்கு என்ன தோன்றுகிறது. அவன் வந்து என்னை அழைத்துச்

செல்வானா? அவள் வந்து என்னை அழைத்துச் செல்வாளா என்று தானே? தெரியவில்லையேடா சாமி என்கிறீர்களா?

அது சரி இதற்குள் நான் யாரென்றும் கண்டுபிடித்திருப்பீர்கள் தானே?

நீங்கள் புன்னகைப்பதைப்பார்த்தால் கண்டுபிடித்து விட்டீர்கள் என்று தான் தெரிகிறது.

சுற்றி வளைத்து தான் ஏன் பேசவேண்டும்? நான் ஒரு சொல்தான். அதுவும் அதிக நீளம் கூட இல்லாத ஒரு ஈரசைச் சொல். உங்கள் எண்ணத்தில் ஒரு சிறு புள்ளியாக கருத்தரித்து இதயத்தில் உழன்று நேரம் வரும்போது நாவிலிருந்து நீங்கள் பிரசவிக்க நேரடியாக நாங்கள் உங்கள் எதிராளியின் எண்ணத்திற்குள் ஒரு புள்ளியாக மாறி கருக்கொண்டு விடுவோம்.

ஒரு சாதாரண சொல் தானென்று எங்களை நினைத்து விடாதீர்கள். அண்டம் பேரண்டம் எல்லாவற்றிலும் அதிக எடை கொண்டது எதுவென்றால் பூச்சிகள் என்று சொல்லாதீர்கள் அது நாங்கள் தான். ஈசல் பூச்சியின் சிறகுகள் போல எங்கெங்கும் உதிர்ந்திருக்கும் எங்களை ஒன்று சேர்த்தால் இந்த பூமி எடை தாங்காது. கடவுள் திக்கு முக்காடி திணறிப்போவார்.

பிறகு பேசத்தெரிகிறது என்ற ஒரே காரணத்திற்காக எந்நேரமும் உளறிக் கொட்டிக் கொண்டே இருந்தால் அது கடவுளாக இருந்தாலும் மனிதர்களாக இருந்தாலும் அதற்குரிய விலையை கொடுத்துதானே ஆகவேண்டும்.

அப்படியே கண்களை மூடிக்கொண்டு எங்களையெல்லாம் கடலில் அள்ளிக்கொட்டி விடுவதாக (அணுக்கழிவை பற்றி ஏன் இப்போது

அநாவசியமாக நினைத்துப்பார்க்கிறீர்கள்?) கற்பனை செய்து கொள்ளுங்கள். அலைமேலே நுரைகளுக்குப் பதிலாக நாங்கள் பளீர்

வெண்மையாக மிதந்து கொண்டிருப்போம். கடல் முழுவதும் புரளும் சொற்கள் விதம் விதமான மொழி மொழியான சொற்கள். சுவாராஸ்யம் தான் போங்கள். ஆனாலும் என்ன பயன்? சிறிதே சிறிது நேரத்திற்கெல்லாம் எங்களின் உடல் வெப்பம் தாளாமல் கடல் மொத்தமும் ஆவியாகி போய் மேகத்தில் கலந்து விடும்.

சரி அதை விடுங்கள் இவன் நான் ஒரு சாதாரண இரண்டசை சொல் தானே எதற்கு அதை ஞாபகத்திற்கு கொண்டுவந்து தொலைக்க வேண்டுமென்று இறுமாப்பில் இருக்கிறான் போல் தெரிகிறது.

நாங்கள் ஓரசையாக இருந்தால் கூட எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென்று இந்த மனிதர்களுக்கு தெரிவதில்லை.

அங்காங்கே ஈசல் பூச்சிகள் போல குவிந்து கிடக்கும் எங்களை காற்றென்னும் பேரலை வந்து ஒரு உலுக்கு உலுக்கினால் பன்னீர் பூக்கள்

போல உதிர்ந்து நிறைந்து ஒரு கணத்தில் இந்தப்பூமியை சொற்களின் சமாதியாக்கிவிடுவோம்.

உங்கள் நிழல் கூட உங்களை வெறுத்து ஒரு கணம் பிரிந்து போகலாம். உயிருக்கு உயிரான உறவுகள் கூட பேதமையில் பிரிந்து போகலாம்.

ஆனால் நாங்கள் என்றாவது பிரிந்திருக்கிறோமா உங்களை? சொல்லுங்கள். நான்முகனும்

பரந்தாமன் திருமாலுக்கும் தொப்புள் கொடி உறவு எப்படியோ அப்படித்தானே உங்களுக்கும் எங்களுக்குமான உறவுகள்.

எனக்கும் நன்றாக பேச வருகிறது என்று சிரிக்கிறீர்கள் தானே? நியாயமாகப் பார்த்தால் உங்களைப்பார்த்து தான் நாங்கள் சிரிக்க

வேண்டும். ம்ம் காலம் தானே இப்படி சிரிக்க சொல்வதும் சிரிக்க வைப்பதும்

ஆதியிலே இருந்த வார்த்தை துடித்து மாம்சமான கதையை மறந்து விட்டீர்கள் போல் தெரிகிறது. கடவுள்கள் சாத்தான்கள் மனிதர்கள் மற்றும் சில விலங்குகள் யாவரும் தங்களை வெளிப்படுத்த எங்களைத்தானே பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

மௌனம் மௌனம் என்று பேசுகிறீர்களே இந்த உலகம் தொடர்ந்து மௌனத்திலேயே இருந்திருந்தால் இங்கே ஒரு புல் பூண்டு ஒரு கவிதை இசை காதல் ஈர்ப்பு என்று ஏதாவது ஒன்று மண்ணில் தோன்றியிருக்குமா?

ஆதியில் ஓம் என்ற ஒலியிலிருந்து தான் உலகம் முகிழ்த்ததாக சொல்கிறார்கள். கடவுள் மலைப்பிரசங்கத்தில் எங்களை அற்புதமாக பயன்படுத்தியிருக்கிறார். அவர்கள் எல்லாம் என் ஆதி மூதாதையர்கள். ஆனாலும் இன்னும் எங்கோ ஒரு மூலையில் உயிர்ப்போடு தான் உலவிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் எங்களை அற்புதமாகப் பயன்படுத்திக் கொண்டது சாத்தான் தான் என்பேன். இது என் தனிப்பட்ட கருத்து தான். பொதுவாக எங்கள் இனத்தவரின் கருத்துமே இதுவாகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன்.

இன்றைய சில அதி முக்கிய அரசியல்வாதிகளின் முகங்கள் உங்களுக்கு ஞாபகத்திற்கு வந்து தொலைப்பதால் நீங்கள் சிரிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ஆயிரம் தான் சொல்லுங்கள் அவர்கள் தான் எங்கள் கொள்கை பரப்பு செயலாளர்கள் என்று சொன்னாலும் தவறில்லை.

பிறகு உங்கள் வள்ளுவர் சொல்லுவது போல,

சொல்லுக சொல்லில் பயனுள சொல்லற்க

சொல்லில் பயனிலாச் சொல்

என்று எல்லோருமே ஆரம்பித்து விட்டால் எங்களைப்போன்றவர்களின் நிலைமை என்ன ஆகும் சொல்லுங்கள்.?

வெளி உலகைப்பார்க்காமலே வாழ்க்கையை முடித்து கொள்ள வேண்டியதுதான்?

அப்படிப்பார்த்தான் இன்று தொன்னூறு சதவீதம் கதை கவிதைகள் நாவல்கள் இலக்கியம் பிறகு மொழி பெயர்ப்புகள் என்று ஏதாவது உருப்படியாகத்தான் தோன்றியிருக்குமா என்று நீங்களே சொல்லுங்கள்.

நீங்கள் பார்ப்பதை பார்த்தால் நான் என்ன சொல் என்று நீங்கள் கேட்கிறீர்கள் தானே? அது இப்போதைக்கு முக்கியமல்ல இன்னும் சிறிது நேரத்தில் நான் சொல்லாமலேயே என் பெயரை நீங்களே தெரிந்து கொள்ளத்தானே போகிறீர்கள்? அப்போது உங்கள் முகம் காட்டும் பாவங்களையும் நான் அருகிலிருந்து தானே பார்க்கப்போகிறேன்

சரி கொஞ்சம் அதிகமாகவே பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன். மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒரு அபலைக் கைதியின் கடைசி ஆசை என்று இந்தப் பிதற்றல்களையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். இனி நீங்களே விரும்பினாலும் இப்படி கதையளக்க எனக்கு நேரமில்லை.

அதோ வீதியைப் பாருங்கள்.அவன் வந்து கொண்டிருக்கிறான்.அவன் கைகளைப்பாருங்கள் ஏதோ பார்சல் பொட்டலம். நான் தான் சொன்னேனில்லையா. (உங்களைப்பற்றியெல்லாம் எங்களுக் தெரியாதாடா?) என் இதயத்தின் துடி துடிப்பு பத்து மடங்கு எகிறுகிறது.

வாடா வா என் தந்தையே அன்னைக்கு அன்னையே தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பார்கள் அது உண்மைதான் போலிருக்கிறது. பாருங்கள் தன்னிச்சையாக அவன் கால்கள் இந்த வெள்ளெருக்கு பக்கத்தில் நிற்கின்றன. அடுத்து அவன் செய்தது தான் அதிசயத்திலும்

அதிசயம். சரியாக நான் நெளிந்து துடித்துக் கொண்டிருக்கும் முரட்டு இலையை தன் விரல் நகங்களால் நீவுகிறான். இது தானே விதியென்பது.

சொன்னால் நம்பவே மாட்டீர்கள் இப்பொழுது அவன் விரல் நகங்களால் இலையின் மீது என் பெயரை கீறுகிறான். அப்பப்பா என் கண்களையே

என்னால் நம்ப முடியவில்லையே? இது தான் எனக்கு இறைவன் தந்த கடைசி சந்தர்ப்பம். நான் ஓடோடி சென்று அவன் விரல் நகங்களின் வழியாக தத்தி தத்தி ஏறி உள்ளங்கைக்குள் சென்று விட்டேன் பாருங்கள்.

வீட்டிற்குள் நுழைவதற்கும் முன்பு அதே கைகளால் தன் தலையை கோதுகிறான் பாருங்கள். பழம் நழுவி பாலில் விழுகிறது எனக்கு. இப்போது ஒரே தாவாக தாவி அவன் தலைக்குள் நுழைந்து விட்டேன். உன் தலைக்கு மேல் நானடா என்று கூவலாம் தான் ஆனால் ஆணவத்தில் ஆடுவதாக நீங்கள் நினைப்பீர்கள்.

மாடிப்படிகளிலேறி அழைப்புமணியை அழுத்திவிட்டு அவனும் நானும் காத்திருக்கிறோம். கதவு திறக்கவில்லை. அவள் பெயரைச்சொல்லி அழைக்கிறோம் பதிலில்லை. கொஞ்சம் பதட்டமாகி கதவை வேகமாக தள்ளுகிறோம். மனது திறந்து கொள்வது போல மென்மையாக திறந்து கொள்கிறது.

உள்ளே நடு ஹாலில் மின்விசிறியின் இரும்பு வளையத்தில் இரத்த நிறச்சேலையை கழுத்தில் சுற்றி மஞ்சள் அரளி மரத்தில் பட்டாம் பூச்சி ஒன்று தூக்கிட்டு தொங்குவதைப்போல தொங்கிக் கொண்டிருக்கிறாள்.

ஓடிச்சென்று அவள் கால்களை கட்டிக்கொண்டு என்னென்னவோ அழுது பிதற்றிக்கொண்டிருக்கிறான்.

நான் மெல்ல அவன் தலையிலிருந்து சடுதியில் தாவி அவள் கால்களின் வழியாக உரிமையாக மேலேறிச்சென்று அபரிதமான அழகு கொண்ட அவள் கழுத்துப்பாகத்தையும் கடந்து, இலேசா திறந்திருக்கும் அவள் இதழ்களுக்குள் ஒரு சிறிய தேனீயைப்போல நுழைந்து தித்திக்க தித்திக்க ஆழமாக முத்தமிட்டுக் கொண்டிருக்கிறேன்.

இப்பொழுது நான் எந்த சொல்லென்று எளிதாக நீங்கள் கண்டுபிடித்திருப்பீர்கள் தானே?

❑

# மகிழை. சிவகார்த்தி குறுங்கவிதைகள்

**"முகாரி"**

*முகாரி பாடுகிறது*
*மூங்கில்*
*புல்லாங்குழலாய்!*

❍

**"(ஏ) மாற்றம்"**

*மழை கடலாகிறது*
*காகிதங்கள்*
*கப்பலாகிறது..*
*ஆனாலும் அவர்கள்*
*மட்டும் அப்படியே*
*வெரும் தெருவோர*
*குழந்தைகளாய்!*

❍

**"தலைக்கணம்"**

*வாசலில்*
*மாக்கோலம் போட்டவள்*
*மாடி வீட்டிற்கு*
*கு(ப)டியேறியதும்*
*மருந்து வைக்கிறாள்*
*எறும்புகளுக்கு..!*

❍

**"பாசம்"**

*அம்மா*
*கண் துடைக்கிறாள்..*
*காலமான பிறகும் கூட*
*கனவில் வந்து..!*

❍

**"சுகமான சுமை"**

*ஒரு*
*சிறு மரத்தையேனும்*
*தனக்குள்*
*சுமந்தபடியே*
*பறக்கின்றன*
*எப்பொழுதும்*
*பறவைகள்..!*

❍

**"முரண்"**

*கர்ப்பம் தரிக்காத பெண்ணென்றால்*
*தாலியருத்த மூலியென்றால்*
*தள்ளிவைப்பு..!*
*பூக்காது காய்க்காது கனியிடாது*
*ஆனாலும் எங்கும் முதலிடம்*
*வெற்றிலைக்கு..!*

❍

**"கேளாமை"**

*கடவுளுக்கு செய்யப்படும்*
*அர்ச்சனைகளின் சத்தத்தில்*
*பல ஏழைகளின்*
*பிராத்தனைகளும்*
*வேண்டுதல்களும்*
*அவர் காதுகளில்*
*விழாமலே போய்விடுகிறது*
*பல சமயங்களில்..!*

❑

# வாழும்வரை போராடு?

● அலெக்ஸ் பரந்தாமன்

"வாழும்வரை போராடு.."

வாய்கள் உச்சரிக்கும்போது மட்டும்
வார்த்தைகள்
இனிப்பாகின்றன..
உவப்பாகின்றன..
தெம்பாகவும் இருக்கின்றன..

மனச்சோர்வுக்கு
ஆன்றோர் அன்று கூறிய இவ்வார்த்தை..
இயலாமல் கிடக்கிறது இன்று
எளியவர்களின் இதயங்களுக்குள்.

ஆங்காங்கே
மண்ணில் மிதிபட்டுக் கிடக்கும்
கொழுகொம்பற்ற முல்லைச் செடிகளுக்கு
வாழும்வரை போராடுவதற்காக
மனமுவந்து தேர் கொடுக்க
பாரியைப்போல்
இப்பாரினில் எவருளர்?
எடுத்துச் சொல்க.

வஞ்சகம், சூது, பொறாமையெனும்
பல்வகை நஞ்சுணர்வும்
வாழ்வினை இரு கூறாக்கி நிமிரும்வேளை..
அஞ்சிடும் மனதோடொத்து ; அவைக்கு
ஆறுதல் சொல்ல ஆருளர் இங்கே?

அக்கிரமங்கள் மிகுதியாகி
அன்பு தணிந்து கிடக்கிறது
வான்மழை காண வயற்பரப்புகள்போல்.

நிஷ்டைகளுக்குள் தம்மை மறைத்தபடி..
நிர்வாண அகத்துக்குள்
தம்மைப் புதைத்தபடி..
தீர்ப்பு வழங்குவதற்காய் காத்திருக்கின்றன
மக்கள் கையெடுத்துக் கும்பிட்ட
கடவுளர்கள்.

அக்கிரமங்கள் மிகுதியதில் ; பாவம்
அவர்களும்தான் ஏது செய்வர்?

பலரது கைச்சைகளில்
பலவகை ஆயுதங்கள்!
இச்சைகளைத் தணிப்பதற்கு
இளவயது யோனிகள்!
வழிப்பறியில் நகையறுத்து
வாழும் பெண்ணை விதவையாக்கி..
துஷ்பிரயாகங்களும்
தூரவொரு இடமாகி..
சுழலும் பூமிமீது
சுற்றிச்சுற்றி நிகழுன்றன
கலியுகத்தின் முன்னொத்திகை.

"வாழும்வரை போராடு.."
ஆம்!
அராஜகங்கள் போராடுகின்றன
தங்கள் வாழ்வுக்காக..
வசதிக்காக..
வன்மம் தீர்ப்பதற்காக..

❍

● அலெக்ஸ் பரந்தாமன்

# எலிவால் நரை முடிகள்

அக்கினி சாட்சிமுன்
மாலைகள் மாற்றிக்கொண்ட
பின்நாள்களில்
கருநாக நீளத்திலமைந்த
உனது
கார்மேகக் கூந்தலின் சுருளே
படுக்கையிலெனக்கு
பாதித்தலையணையாகிப் போனது.

எழுபதகவை நகர்ந்தபின்
எலிவாலாகிப்போனவுன்
வெண்நரைகள்
'கொட்டைப்பாக்கு' வடிவமாய்
குறுகிக்கொண்டபோது..
போதுமானதாக இருக்கவில்லை
தலையணைச் சுகம்
உனக்கும் எனக்கும்.

பகல் நினைவுகளில் மட்டுமன்றி..
கைகளை மடித்து ; இரவினில்
கண்ணுறங்கும் போதினிலும்
கனவினிலும் வருகிறது எனக்கிப்போது
சுடுகாட்டில்
சிதைமீது கருகிக்கொண்டிருந்த
உந்தனது
அந்த ' எலிவால் நரைமுடிகள்'. ❑

● நல முத்துகருப்பசாமி

# பற்களும் புற்களும்

ஓர் அடர்ந்த காட்டில்
உலகிலேயே மிகப்பெரிய புலி!
அது கொண்ட சபதம்
எல்லா உயிர்களையும்
தனக்கு இரையாக்கிக் கொள்வது..


அதே காட்டில்
உலகிலேயே மிகப்பெரிய மான்
அது கொண்ட சபதம்
எந்த உயிரினங்களுக்கும்
தான் இரையாகாமல் இருப்பது.. ❑

(நன்றி:விகடன்)

● க. புனிதன்

# கோடை தென்றலும் தள்ளாடும் சில பூக்களும்

பிச்சைக்காரனை போல்
போய் நிற்கிறேன்
நகைச்சுவை சொற்களாய்
நிரம்புகின்றன தட்டில்
ஏழை வீட்டில்
கோடையில் நின்று போன
மலை அருவியின் வற்றிய சொற்களோடு
வந்திருக்கும் ஏழை
நம்பிக்கை தரும் சில கடவு சொற்களால்
தன்னை புதுப்பித்து கொள்கிறான்
ஏதுமற்ற வெறுமையை
வாழ்வின் சொற்களால்
நிரப்பி கொள்கிறார்
முதியவர். ❑



# அந்த அரபிக்கடலோரம்

*ஒவ்வொரு பயணங்களும், நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதர்களும் தான் நமக்கு படிப்பினையை, வாழ்க்கையை கற்று தருகிறார்கள். இந்த உலகத்தில் முட்டாள் என்று*

யாருமில்லை ஏனென்றால் ஒவ்வோரிடத்திலும் கற்றுக்கொள்ள ஏதோ ஒன்று ஒளிந்திருக்கிறது அதே போல அவன் பெரிய அறிவாளி என்றும் யாருமில்லை ஏனென்றால் ஒவ்வொரு மனிதர்க்குள்ளும் ஒரு முட்டாள்தனம் ஒளிந்திருக்கிறது.

இவனெல்லாம் உருப்படுவானா? இவனெல்லாம் எங்கே சம்பாதிச்சு குடும்பத்தை காப்பாத்த போறான்னு கேலி கிண்டல்களுக்கு உள்ளான நபர்களில் நானும் ஒருவன்.

சாதாரண டிவி ரிமோட் சேனல் மாற்றுவதில் தங்கையோடு மல்லுக்கட்டுக்கு நிற்கும் குழந்தைத்தனமான ஒருவனை அந்த அரபிக்கடலோரம் எப்படி பொறுப்புள்ளவனாய் மாற்றியது.

டே சரவணா இனிமே லீவு நாளுல அளவுக்கு மீறி குடிக்காதடா

ஏன்?

நேத்து என்ன நடந்திச்சு தெரியுமா?

என்ன நடந்திச்சு

எப்போதும் ஒரு புன்னகையோடு எல்லார்கிட்டயும் அன்பா பேசுற நீ என் சாதி என்ன தெரியுமா,நீங்களெல்லாம் எனக்கு சரிக்கு சமமா பேசவே தகுதி இல்லடான்னு நம்ம முருகன்,வடிவேலன்,குமார் அண்ணன்கிட்ட பேசியிருக்க..குறிப்பா குமார் அண்ணன் நீ தெளிவா ஆனதும் வேறொரு ரூமை பார்த்துக்கிட்டு போக சொன்னார்.

என்ன சாகுல் அண்ணா சொல்ற?

சாகுல் அண்ணா கேட்கவே ஆனந்தமா இருக்கு சரவணா,மூச்சுக்கு முன்னூறு தடவை தம்பி,தம்பின்னு ஆசையா உன்னை கூப்பிட்டு இருக்கேன்.உன்னை கூட பொறந்த தம்பியா தான் நினைச்சேன் ஆனா நேத்து குடிபோதைல இருந்த உன்னை சமாதானம் பண்ணி தூங்க வைக்கலாம்னு வந்த என்னை வாடா,போடா மயிரான்னு சொன்னது மட்டுமின்றி நீ கையை ஓங்குனதுல ரெண்டு,மூணு அடி மேலயும் பட்டிருச்சு.என்ன ஒண்ணு ஹாஸ்பிட்டல்ல சேருற மாதிரி பெருசா அடியேதும் படலை அதுவரைக்கும் சந்தோசம்.

ஒரு காலத்துல நான் இங்க வந்தப்ப தமிழ் பேச ஆளுங்க இருக்க மாட்டாங்க.இந்திக்காரன்,மலையாளி,ஆந்திரக்காரன்,கர்நாடக காரன்னு மொழி கடந்தும்,ஏன் சில பேருக்கிட்ட நாடு கடந்தும் ஒற்றுமையா,நட்போட பழகி வந்திருக்கேன்.

முருகன்,வடிவேலன்,குமார் அண்ணனை பார்த்ததுக்கு அப்புறம் தான் நம்ம தமிழ்நாடுப்பா,நம்ம தமிழ் ஆளுங்கப்பான்னு ஒற்றுமையா ஒரு அறை எடுத்து தங்கினோம்.உன்ன கண்டதும் கூட நம்ம தமிழ் பையன்ப்பா நம்ம ரூம்லேயே இருக்கட்டும்னு எல்லோரும் ஒரு மனதா சொன்னாங்க.

முன்னாடி இந்த ரூமுல தண்ணி அடிக்கவே அனுமதி இல்லை ஆனா உனக்கு அந்த பழக்கம் இருக்குன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம்,உனக்கு சொந்தக்காரங்க யாரும் இல்லைன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் நம்ம சரவண பயலை வெளியே தண்ணி அடிக்க சொல்லாதே சாகுல் இங்கயே ரூமுல குடிக்க சொல்லு ஆர்வக்கோளாறுல வெளிய குடிச்சு மயங்கிட போறான் இங்க தெரியும்ல சட்ட திட்டங்கள் அதிகம் அப்புறம் ஊருக்கு போயிட நேரிடும்.அந்த பயகிட்ட சொல்லு அளவுக்கு அதிகமா குடிச்சு உடம்ப கெடுதிக்க வேணாம்னு.

அப்படி உன் மேல அக்கறையா இருந்த அண்ணன் மார்கள்டா,இங்க எல்லாரும் சாதி,மதம் கடந்து வாழுறோம்.இங்க யாருக்காவது உடம்பு சரியில்லைன்னா ரூமுல அன்றைக்கு ஏ.சி ஓடாது.நோன்பு நாளுல ஸஹர் டைம்ல என்னை நோன்பு வைக்க எழுப்பி விடுறதே நம்ம குமார் அண்ணன் தான்.இந்த ரூம்ல யாரு என்ன சாதி,என்ன மதம்னு யாருமே பார்த்ததே இல்லை.ஊர்ல தான் வித,விதமான டம்ளர்,தட்டுன்னு சாதி வாரியா சில ஏரியாவுல பிரிச்சு பார்த்து உணவு போடுவாங்க.இங்க லீவு நாளுல பெரும்பாலும் சகான் சாப்பாடு தான் (ஒரே தட்டில் சேர்ந்து சாப்பிடுவது)

இப்பவும் சொல்றேன் சரவணா நீ நல்லவன் தான் ஆனா முடிஞ்சவரைக்கும் அந்த மது பாட்டிலை மட்டும் தொடாதே.இப்போதைக்கு நம்ம பைசல் இக்கா கிட்ட சொல்லியிருக்கேன். ஒரு மாசம் அங்கே போய் தங்கிக்கோ அண்ணன்மார்கள் கோபம் தணிஞ்சதும் அவங்ககிட்ட பேசி திரும்பவும் இங்க இங்க கொண்டு வந்திடுறேன் என்றேன்.

சரி சாகுல் அண்ணா என்று சொல்லிவிட்டு பெட்டியும் கையுமாக பைசல் இக்கா என்ற மலையாளி ரூமுக்கு சென்றான் சரவணன்.

சில வாரங்களுக்கு பிறகு

ட்ரிங்..ட்ரிங்

சாகுல் அண்ணா நான் சரவணன் பேசுறேன்

சொல்லுப்பா

அண்ணா நம்ம ரூம் மாதிரி இங்கே கலகலன்னு இல்லை அவனவன் வேலை முடிஞ்சு வந்ததும் போனும்,கையுமா பெட் ஸ்க்ரீன்ன இழுத்து விட்டிட்டு போயிடுறான்.நம்ம ரூம் மாதிரி சீட் விளையாட்டு,கேரம் போர்டு மாதிரி கலகலன்னு எவனும் விளையாட கூட மாட்டுறான். இவ்வளவு ஏன் சரியா பேச கூட மாட்றான்.அவனவன் அவன் வேலைய மட்டும் பார்த்துக்கிட்டு போயிடுறான்.ஒரு மாதிரி இருக்குன்னா.இங்க மூட்டைப்பூச்சி வேற இருக்குன்னா.நீங்க வந்த புதுசுல நீங்க பட்ட கஷ்டத்தை குறிப்பா மூட்டைப்பூச்சி கடி,பைப்பை திறந்தாலே வரும் சூடான தண்ணி குளியல்,சரியில்லாத சாப்பாடுன்னு சாப்பிட்டு அல்சர் வந்ததுன்னு சொல்லும் போது இது ஒன்பதாவது தடவை,பத்தாவது தடவைன்னு நீங்க எது சொன்னாலும் கிண்டல் பண்ணி ஓட்டி இருக்கேன் ஆனா இங்க மனம் விட்டு பேச ஆளு இல்லாம யாராவது கிடைச்சா நானே ஒரு விஷயத்தை ரெண்டு மூணு தடவை சொல்லுவேன் போலிருக்கு.

கவலை படாதே சரவணா,நீ தப்பை உணர்ந்திட்ட நம்ம அண்ணன்மார்கள்கிட்ட சொல்லி இன்னும் ரெண்டு மூணு நாளுல உன்னை திரும்ப இந்த ரூமுக்கு கொண்டு வந்திடுறேன்..

குமார் அண்ணா சரவணா இல்லாம இந்த ரூமே ஒரு மாதிரி இருக்கு அவனை திரும்ப இங்க வர சொல்லட்டுமா

அவனை திரும்ப வர சொல்லு ஆனா அந்த சனியன் பிடிச்ச அவனுக்குள்ள அந்த சாதிவெறியை தூண்டக்கூடிய அந்த கருமம் புடிச்ச மது பாட்டிலை மட்டும் தொட சொல்லாதே

ஓகே அண்ணா முன்னே மாதிரியெல்லாம் நடக்காத மாதிரி நான் பார்த்துக்கிறேன்

பெட்டியும் கையுமாய் சரவணன் திரும்ப வந்தான்.முன்பு போல் கலகலவென்று இல்லை அவன் திரும்ப மாறுவதற்கு சில நாட்களாவது பிடிக்கும்

சாகுல் அண்ணா நானும் வந்ததும் கேட்கலாம்னு நினைச்சேன் அந்த எதிர்த்த ரூம் சேகர் மற்றும் பக்கத்து ரூம் அன்வர் இக்கா எங்கே ஊருக்கு போய் இருக்காங்களா?

அவங்கள இப்பவெல்லாம் பார்க்கவே முடியலையே

ஊருக்கு எல்லாம் போகலைப்பா உலகத்தை விட்டே போயிட்டாங்க அன்வர் இக்காவுக்கு உறக்கத்திலேயே மாரடைப்பு வந்து இறந்திட்டார்.ஒரு ரெண்டு வாரத்துக்கு முன்னாடி தான் அவர் உடல் விமானம் மூலம் அவர் சொந்த ஊருக்கு அனுப்பப்பட்டது.

என் ஆந்திர நண்பன் சேகருக்கு என்ன ஆச்சு..அவனுக்கு சின்ன வயசு தானே,போன வருஷம் தானே கல்யாணம் கூட பண்ணான்

மரணத்துக்கு வயசெல்லாம் தெரியாதுப்பா.அந்த கடவுள் இன்னாருக்கு இன்று முடிவு என்று எழுதி இருந்தால் அவங்க மரணத்தை யாராலும் தடுக்க முடியாது.இருக்கிற வரைக்கும் யாருக்கும் துரோகம் பண்ணாம முடிஞ்சா நாலு பேருக்கு நல்லது பண்ணிட்டு போயிடணும்.ஏன்னா இந்த பாழாய் போன மரணம் எப்ப வரும்னு யாருக்குமே தெரியாது. நாம்ம செத்ததுக்கு அப்புறம் ஒருத்தன் அழுவுறானா அது தான் நாம்ம வாழ்ந்ததுக்கான அர்த்தம்.இருக்கிற வரைக்கும் எந்த ஈகோ இல்லாம எல்லார்கிட்டயும் விட்டு கொடுத்து அன்போட,நட்போட வாழணும்.இந்த போட்டி,பொறாமை இல்லாத பழக்கத்தை, தப்பு செஞ்சா மன்னிப்பு கேட்குற பக்குவத்தை,விட்டு கொடுக்கிற பண்பை,பணம் வந்தாலும்,போனாலும் ஆடாத குணத்தை,ஏற்ற இறக்கத்தில் விட்டு போகாத தன்னம்பிக்கையை நீ பெரியவன்,நான் பெரியவன் என்கிற அகந்தையை அறவே அகற்றிய பெருமை இந்த அரபிக்கடலோரத்துக்கு நிச்சயம் உண்டு சரவணா.

அண்ணா சேகர் எப்படி செத்து போனான்னு சொல்லவே இல்லையே.வேணாம் சரவணா அந்த விஷயத்தை விட்டிடு

ப்ளீஸ் அண்ணா சொல்லுங்க.. ஒரு காலத்துல ஒண்ணா சேர்ந்து தண்ணி அடிச்சு இருக்கோம், ஒரு நட்பா பழகி இருக்கோம்

மனசை திட படுத்திக்கோ தம்பி,சேகர் எப்போதும் இரவுல லைட்டா யாருக்கும் தொந்தரவு பண்ணாத விதத்துல தண்ணி அடிப்பான் ஆனா லீவுல மட்டும் கண்ணு மண்ணு தெரியாம குடிப்பான். அவன் லீவு சனிக்கிழமை வழக்கம் போல அளவுக்கதிமா தண்ணி அடிச்சிருப்பான் போல. அவன் கட்டிலில் மேல ஏறும் போது தவறி விழுந்து பின்னங்கழுத்தில் அடிப்பட்டு இறந்திருப்பான் போல. ஏன்னா அந்த டைம்ல அவன் ரூம்ல யாருமே இருக்க மாட்டாங்க கொஞ்சம் துடி, துடித்து வலியோடு தான் இறந்திருப்பான். அவனை நம்பி கழுத்தை நீட்டிய அந்த பொண்ணோட வாழ்க்கையை நினைச்சா தான் ரொம்ப கஷ்டமா இருக்கு தம்பி

சில மாதங்களுக்கு பிறகு

அந்த சம்பவத்துக்கு பிறகு சரவணா மது மட்டுமல்ல காலியாக உள்ள மது பாட்டிலில் வெறும் தண்ணீரை கூட நிரப்பி குடிப்பதில்லை..

❑

● பா. சிவகுமார்

# உயிர் வளி(வலி)!

அவசரமாக
அவசரவூர்தியில் வந்தும்
இடமின்றி
மருத்துவமனைக்கு
வெளியே தவித்திருக்கையில்
உயிர் வலியொடு
உயிர் வளியின்றி
கொஞ்சம் கொஞ்சமாக
குறைகின்றது
உயிர் வளி அளவும்
உயிர் வாழும் அளவும்
எங்கிருந்தோ கிடைத்த
உயிர் வளிக் காற்றில்
அடங்கியிருந்தன
புண்ணிய கணக்குகள்!
புத்தாக்கம் பெற்ற
நுரையீரல் காற்றுப் பைகளில்
ஈரமாக ஒட்டிக் கொண்டுள்ளது
நன்றியுணர்வு! ❑

● சா.கா.பாரதி ராஜா

# துளிப்பாக்கள்

சிறுவன் விட்ட கப்பல்
தூரத்திலிருந்து வந்து பயணிக்கும்
சில மழைத்துளிகள்

❍

பூத்துக் குலுங்கும் மரத்தில்
ஒரு காகம் கரைய
எனக்குக் கேட்கிறது கவிதையாக

❍

புத்தரின் மேலமர்ந்த
பட்டாம்பூச்சியும் ஆசி வழங்குகிறது
தனது சிறகுகளை அசைத்து

❍

சுவைக்கும் தேநீரின் ஆவியும்
மெல்ல விரட்டுகிறது
முகத்தின் மேல் குளிரை

❍

முத்தம் தருகிறேன்
கண்களைத் திறக்கிறது
இசை தரும் புல்லாங்குழல் ❑

● கனகசபாபதி செல்வநேசன்



# ஞானப் பூங்கோதை

அவளைப் போல் நானும்
பெண்ணாய்ப் பிறக்க வேண்டும்.

ஆயுதம் சுமந்து அணிவகுத்துச் செல்லும்
அந்தப் பெண் போராளிகள் வரிசையில்
கடைசியாளாய் அவள்

இரட்டைப் பின்னல்ச் சடையை
மடித்துக் கட்டிய சுதந்திரப் பறவையவள்.

தன் தேசத்தின் விடுதலைக் கனவை
சீருடையாக அணிந்து கொண்டிருக்கிறாள்.

அகிம்சையின் கைத்தடியும்
புத்தனின் பிச்சைப் பாத்திரமும்
அவள் மீது வன்முறை பிரயோகித்த
போதிலும்
தாய் மண்ணின் சுவாசத்தில் உணர்வு
கலந்தவள்.

போராடிக் களைத்தவலல்ல அவள்
களமாடிக் கறுத்தவள்
அவள் பாதம் பதித்து நடந்த மண்ணில்
பெண்கள் தனித்துப் பயணித்தனர்
நள்ளிரவு வேளைகளிலும்.

ஆதலால் அவள் கண்களில் கர்வம்
அதிகம் இருக்கிறது.

ஒரு இடப்பெயர்வின் அவலநாளில்
அவளுடன் பேசக் கிடைத்த
சந்தர்ப்பத்தில்....

நீங்கள்
காந்தரூபனோ என்றேன்

ஆமாம் என்றவள்
நீங்கள் ஞானப் பூங்கோதைதானே
என்றாள்,,,,,!?

நான் மௌனித்து நிலம் பார்க்கிறேன்
அன்று அது எங்களுடையதாக
இருந்தது
இன்று வெறுமையாகிக் கிடக்கிறது
தாய்மடி.

என் பிரிமென்றகடு
ஆழமாய்க் கீழிறங்கி மேலெழுகையில்
வருகின்ற மூச்சுக் காற்றும்
சொல்கிறது.....

நீ அவளாய்ப் பிறக்க வேண்டும். ❑



# பேரன்பு

நீ கொஞ்சம் இடம்
கொடுத்திருந்தால்
உன் காலைச்
சுற்றி வரும்
நாய்குட்டியாய்
உன் மடிமீது
ஏறியிருப்பேன்..
நீ கொஞ்சம்
அனுமதித்திருந்தால்
தலைக்கு மேல் பறக்கும்
பறவையாய் உன்
தோளில்
அமர்ந்திருப்பேன்..
நீ இன்னும்
கொஞ்சமே அனுசரித்திருந்தால்
காட்டுப் புலியாய்
உன்னை அன்பில்
சாய்த்து வீட்டு
பூனையாய் வலம் வந்திருப்பேன்..
பாராமுகமாய்
இருந்து விட்ட
நீ..இன்னும் ஒரு தடவை
அழைத்திருந்தால்
மலர்ந்த மலரின்
மகரந்தமாய் உன்
விரல்களில் ஒட்டிக் கொண்டிருப்பேன்..
நீ ஏனோ
அழைக்கவில்லை
உன் புறக்கணிப்பில்
பெருவெளியெங்கும்
அழைந்து திரிந்த
நான் ஒரு புள்ளியில்
கட்டற்று பறக்கும்
வெள்ளை நிற
பட்டாம்பூச்சியாகிறேன்..
சுவைத்த
சுதந்திரத் தேன்
ருசித்த போது உணர்ந்துக் கொண்டேன்..
அணைத்து
அடிமைப்படுத்துவது
அன்பென்றால்
விலகி நின்று
வலிமைப் படுத்துவது
பேரன்பென்று..ப்ரியமே..!

மனோஹரி ❑

● கவிமலர் த. சரண்யா



# ஈரமான மலர்கள்

*மலர்களே, நீங்கள் மரணிப்பீர்கள்!*
*இன்று நெகிழிகள் அறியும் பூமியில்*
*இந்த இறைவிக்குத் தீட்டு!!!*
*பழைய துணியைத் தேடும் போதெல்லாம்,*
*நாட்களே, நீங்கள் பாவிகள்!!!*

*கற்கும் போதும் கூட நிகழ்ந்திடும்.,*
*தூக்கும் புத்தகப்பையும் கூறிடும்.,*
*பாவமிந்தப் பல்லாங்குழி வயது!!!*
*ஈரம் கசியும் சிகப்பு நாட்கள்.,*
*இனி கோயில்கள் இல்லை!!!*

*கறை கறையாய்த் தொடங்கி,*
*அலை அலையாய்ப் பாய்ந்து,*
*தொடர்கதைத் துன்பங்களில்*
*இறைவா..,*
*குட்டிப் பாவாடை புன்னகைமேலே*
*“பூகம்பம்“*

*ஊமை போல ஓர் பேராசை,*
*பேரன்பின் சாய தோள் கேட்பாய்,*
*குளியலறை நடுவே நின்று*
*நிற்காத் திரவம் என்புடைக்க,*
*பிறப்பே நீ ஒரு “மரணயிசை”!!!*

*சிறு ஓய்வைக் கண்டு கடன் வாங்கிய*
*தேகம் நித்திரை கேள்கின்ற போது,*
*கைக்குழந்தையைப் போல நீயும்*
*புரியாமல் தூரமத்துளி தூவ,*
*பனிப்பூக்கள் போல*
*வீட்டுக் குப்பைக்குள் “சிகப்பு ரோஜா”*

*மகப்பேறென்ற செந்நதியில்.,*
*நிகழ்ந்த ஓர் அற்புதம் தீட்டு!*
*களிமண் மானிடனைக் கீறிய*
*கரு உளியின் புனிதம் தீட்டு!*
*காமன் கடையை சாத்தி - நீ*
*ஆணாகப் பெண்ணினை ஏற்பின்,*
*நீ தேவதை என்று தாய் கூட*
*முத்தங்களால் மொழிவாள்!!!* ❑

● கவிஞர். தக்ஷன், தஞ்சை

# ம்..

நான் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்
நீ வேறெங்கோ பார்த்து
கொண்டிருக்கிறாய்

பேசுதலுக்கும் பார்த்தலுக்குமான
இடைவெளியை
நான் வெறிக்கத் தொடங்குகிறேன்

சொற்களற்றுப் போன இசையை உணர்ந்ததாய்
'ம்...?' என்கிறாய்
நீ பார்த்துக் கொண்டிருந்தது
என் பேச்சைத் தான் என்பதாக

அது
ஓர் இசைக்குறிப்பைப் போல்
ஒலிக்கிறது

'ம்...' என்ற உன் ஒலிக்குறிப்பை
இசைக் குறிப்பாக எழுதிப் பார்க்கிறேன்

அது
வேறொரு 'ம்...' ஆக
இசைக்கிறது

பேசுதல் பார்த்தலின் இணைப்புள்ளிகளில்
மீட்டுதல் அரங்கேறி உதிரக்கூடும்
இன்னுமொரு
'ம்...'

❑

● சசிகலா திருமால்

# தேர்தல் சிலுவை

தேர்தல் களத்தில் நாமிடும்
வாக்குகளெல்லாம்
சிலுவையாக மாறுகின்றன
அதன் பின் ஏற்படும்
அனைத்து விளைவுகளும்
ஆணியாக அறையப்படுகின்றன..

காந்தி நோட்டுக்கொண்டே
கதவடைக்கும்
புதிய வாய்ப்பூட்டு சட்டமொன்று
பிறப்பிக்கப்பட்டது இங்கே..
இதோ தாகம் தீர்த்தது சத்திய சோதனை
மக்களின் குருதிக் குடித்தே..

இதோ இப்போதெங்கள்
கனவுகளெல்லாம்
கல்லறைக்குள் ஒளிந்துக் கொண்டது..
மூடநம்பிக்கையில் ஒன்றாகி போன
தேர்தலினால்
வாக்களித்த பாவத்திற்காய்
நாடு கடத்தப்படுகிறோம் நாங்கள்
அகதிகளாய்..

● கி. சரஸ்வதி

# எல்லாமுமான சொற்கள்

'தேரா மன்னா' - தேறியது பெண்ணின்
சொல்
'ஆரையடா நீ சொன்னாய்' -
அவ்வையின் முன்னெடுப்பு
'தோற்ற பின் தோற்றாயா' -
தர்மத்தின் தலையில் குட்டு
'இறங்க மாட்டேன்' -ஏற்றியது
கறுப்பினத்தை
'நான் உன் மனைவி' - மாற்றியது
காந்தியை
'எங்கே உன் மனைவி' - மாறினான்
பாரதி
'ஊறுகாயைத் தொடுவோம்' -
உலகறிந்தது மென்ஸ்ட்ருபீடியா
'நான் படிப்பேன்'-கற்றுக் கொண்டது
பெண் பேரினம்
'இல்லை என்றால் இல்லை' - சொல்லக்
கற்றது புதுப்பெண்மை
சொல்லிச் சொல்லி அடிக்கலாம்
ஏதுமியலாச் சொற்கள் என ஏதுமில்லை
இங்கு!

❑

# கொன்றை பூக்கள்

● ந.க. துறைவன்

நாடோடி யாத்ரிகன் பயணம்
வாழ்வின் நிலையாமை பாடல்
மனமலை எதிரொலி.

❍

வேம்பு வளர்த்தார் அப்பா
முருங்கை வளர்த்தாள் அம்மா
ரெண்டும் வெட்டியெறிந்தான் மகன்.

❍

என் கையில் புத்தகம்
தோட்டத்தில் அமைதி
படிக்க வந்தது அருகில் பூனை.

❍

சொத்து கைக்கு வந்த பிறகு
சமாதி கட்டினான் மகன்
அப்பா உழைத்த நிலத்தில்.

❍

யாரோ உடைத்திருந்தார்கள்?
மக்கள் கூடும் பூங்காவில்
அழகான பெண் சிலை.

❍

ஒரு துளி மழை
என்ன ஆச்சரியம்?
நிரம்பி விட்டது கடல்.

❍

வேம்பு பூத்து சிரிப்பு
இலையுதிர் காலம் துவக்கம்
பறவைகள் மேற்கு திசையில் பயணம்.

❍

கூடை நிறைய குக்கூ
கை நிறைய பிசுக்கூ
தட்டு நிறைய தொக்கூ.

❍

சிறைச்சாலை
திருடனுக்கு
ஓய்வு இல்லம்.

❍

அந்த கொன்றை பூக்கள்
நான் விரும்பிய பாடல்
காதலி நினைவாய் ரீங்காரம். ❑

வெளிவந்துவிட்டது!

# “நெய்தல்”

(கவிதைக்கான இதழ் 5)




பல கவிஞர்களின் கவிதைகளுடன் வெளிவந்துள்ள அச்சிதழ்.

இதழைப் பெறவிரும்புவோர் தனி இதழுக்கான பணத்தை அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் (தபால்ச் செலவு தனி)

உங்களின் ஆதரவே அடுத்த இதழுக்கான பணியை ஆரம்பிக்க உதவும்.

நட்புடன்,

முல்லை அமுதன்

தொடர்புக்கு : mahendran54@hotmail.com • negizhdesigns@gmail.com

